# திருக்கோயில்

ஜூன் 1991 விலை ரூ. 3





தெய்வச்சேக்கிழார் விழாவையொட்டி மாணவ-மாணவியர்கட்கு கட்டுரைப் போட்டி நடத்தப்படட்டது. வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்குத் தொண்டை மண்டலாதீனம் தவத்திரு சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பரிசுகள் வழங்கி ஆசி கூறினார்.



மயிலை அருள்மிகு கோலவிழி அம்மனுக்கு 108 பால்குட அபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. மயிலை குருஜி சுந்தரராம சுவாமிகள் பாலாபிசேகம் செய்கிறார். இணை ஆணையாளர் திரு. ந. சுவாமிநாதன் பி.ஏ. பி.டி. பி.எல்., உடன் உள்ளார்கள்.

முகப்பு:

சிக்கல்

அருள்மிகு சிங்காரவேலர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு ஆனி<br>ஜுன் 1991 விலை ரூ. 3-00 | மணி : |
|---|---|---|
| 33 | | 6 |


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

*உயர்திரு ஆணையர் அவர்கள்*
*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை*
*சென்னை — 600 034*

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்


அருளாளர்களின் அருள் அனுபவம்
—திருமந்திரச்செம்மல்
டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்
—கோ. சண்முகம் பி.காம்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

மந்திரமாவது நீறு
—நா. ராமமூர்த்தி

கம்பரின் இராமவதாரம்
டாக்டர் த. அமிர்தலிங்கம்

சித்திர பாரதம்
—செவ்வேள்.

கோடையாண்டவரின் அருள்அற்புதங்கள்
—எம். வி. அரங்கநாதன்

ஆடல்காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி
வே. தியாகராஜன்

அட்டலட்சுமி அன்னையரைப் போற்றுவோம்
—கலைமாமணி சுத்தசத்வானந்தா


அறுபத்து மூவர் - பல்வகைத் தொண்டர்கள்
—டாக்டர் மா. இராசமணிக்கனார்

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி
—நெல்லை ஆ. கணபதி

மாலவன் செய்த மச்சாவதாரம்
—ஜெயஸ்ரீ மூகாம்பிகை



# அருளாளர்களின் அருள் அனுபவம்



## திருமந்திரச்செம்மல் டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

**(2)**

பரம்பொருளைப் பற்றிய அறிவு பேரறிவு ஆகும். இறைவனுடைய திருவருளால் அருளாளர்கள் ஒப்பிலா இறை அனுபவம் பெறுகிறார்கள். இந்த அனுபவம் உணர்வு நிலையில் பெறப்படுகிறது. இந்த அனுபவத்தின் விளைவாக அருளாளர்கள் பேரறிவைப் பற்றிய விளக்கம் பெறுகின்றார்கள். பேரறிவினுடைய விளக்கம் அவர்களுடைய உள்ளங்களை உருக்கி மலங்களை நீக்கி, தூய்மைப்படுத்திச் சொல்லொணா ஆனந்தத்தைத் தருகிறது. இத்தகைய ஆனந்தம் உடலைச் சார்ந்த கருவி கரணங்களால் நாம் பெறக்கூடிய இன்பத்தைப் போன்றது அல்ல. பேரறிவினால் கிடைக்கும் ஆனந்தத்தைப் பெற்ற பின் உயிரானது பேரறிவின் நிலையை உணர்ந்து கொள்கின்றது. பேரறிவின் தன்மையைப் பெறுகிறது. பேரறிவாக மாறிவிடுகின்றது. அத்தகைய பேரறிவு பேரறிவுதான். அதற்கு எதிராக நாம் 'அறிவு அறிவு' என்று பறைசாற்றி வரும் சிற்றறிவு சிற்றறிவுதான்.

''சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம்
வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்''

அருள் அனுபவத்தை அடைய உயிருக்குத் தகுதி ஏற்படவேண்டும். அந்தத் தகுதி பல பிறவிகள் பெற்றபின்னர்தான் கிடைக்கின்றது. ஒவ்வொரு பிறவியிலும் உயிர்கள் புரியும் வினை காரணமாக, உயிரானது பல பிறவிகள் எடுத்து வினைகளின் வலிமையை படிப்படியாக குறைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. வினைக்கேற்ப உயிருக்கு உடலை கூட்டுவிப்பது திருவருள்தான். உடலின் சேர்க்கையாலேதான் உயிருக்கு வினைகளைத் தீர்க்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. பின்னர் தக்க நேரத்தில் அந்த உயிருக்கு அருள்அனுபவத்தை அளித்துத் தனது திருவடிகளிலே உயிரைப் பதித்துக் கொள்வதும் இறைவனுடைய திருவருளே.

''விண்ணின்று இழிந்து வினைக்கீடாய்
மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல்
முன்வைத்து
உண்ணின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே''.

(திருமந்திரம்...........113)

''களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.''

(திருமந்திரம்...... 114)

பல பிறப்புகள் எடுத்து, இளைத்து உயிர் உலகப் பொருட்களில் நாட்டம் செலுத்துவதில் தன்மை குன்றி, இறை அனுபவத்தைப் பெற ஏங்கி நிற்பதும் இறைவனுடைய அருளாலே தான் நடைபெறுகிறது.
மாணிக்கவாசகப் பெருமான் தான் அனுபவித்ததை

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்''
(திருவாசகம்-சிவபுராணம்)

என்று எடுத்துக் கூறுவார்.

அறியாமையால் கட்டுண்டு நிற்கும் உயிரைத் திருமூலர் ஒரு குருட்டுக் கிழவனுக்கு ஒப்பிடுகிறார். வயோதிகத்துடன் குருட்டு நிலையும் சேர்ந்தால் அந்த உயிர்படும் பாட்டைச் சொல்ல முடியாது. உயிரானது சோர்ந்து, இளைத்து, தன்னம்பிக்கை இழந்து நிற்கும் நிலையாகும். தனது குறைபாடுகளை தெரிந்து கொண்டு ''இறைவனே, அறியாமையால் மயங்குகின்றேன். உன்னைத் தவிர புக

விடம் வேறொன்றும் இல்லை. இறைவனே என்னைத் தாங்கிக்கொள்ளே'' என்று மணி வாசகப் பெருமான் தான் துணையற்று அல்லல் படுவதை இறைவன்முன் எடுத்து வைத்தது போன்ற நிலையை ஒவ்வொரு உயிரும் பல பிறவிகள் எடுத்த பின்னர் அடையும்பொழுது, அதுவரை தனது ஆற்றலை உயிர் பக்குவப் படுத்த வேண்டிய வழிகளிலே செலுத்திய இறைவனின் அருட்சக்தி பின்னர் உயிருடைய அறியாமையைப் போக்கி ஆட்கொள்கிறது.

•

''இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தானே''.

(திருமந்திரம்.........1514)

அறியாமையாவது தன்னைப் பற்றியும், தன்னை ஆட்கொண்ட பரம்பொருளைப் பற்றியும் தன்னுள் உணர்ந்து கொள்ளாமல் பிற பொருள்களை அறிய வேண்டும் என்கிற நாட்டத்துடன் கருவி கரணங்களைப் பயன்படுத்தி ஒருவித மயக்க அறிவிலே தன்னை ஈடுபடுத்திக் கொள்வதாகும். அறிவாவது திருவருளை உணர்ந்து, திருவருளில் மூழ்கி, திருவருளுக்கு அப்பால் வேறொன்றுமில்லை என்கிற முடிந்த முடிவிற்கு வந்து, அந்தத் திருவருளே தன்னை ஆட்டுவிக்கின்றது என்கிற உண்மையைக் கண்டறிந்து, அதனால் ஏற்படும் தெளிவான ஞானத்தில், ஆழ்ந்த அமைதியில், சிறந்த மன நிறைவில், மாறாத ஆனந்தத்தில் தனித்து நிற்பதாகும்.

''அருளாலே எவையும்பார் என்றான்-அத்தை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்;
இருளான பொருள்கண்ட தல்லால்-கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி''

என்பார் தாயுமானவர்.

அருள் அனுபவம் உயிருக்கு இறை உணர்வைத் தருகிறது. ஒரு உயிருக்கு அருள் அனுபவம் திடீரென்று வருவது போலத் தோன்றலாம். ஆனால் அது தோற்றமே. உண்மையில் எங்கும் பரவி நிற்கும் திருவருள் எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கிறது. உயிரை பாசத்தில் பொருத்துகிறது. பாசத்தைப் பற்றாகக் கொண்ட உயிரை அதனிடமிருந்து வேறு படுத்துகின்றது. அந்த பாசத்தில் உள்ள பற்று நீங்கியவுடன் உயிரை இயல்பாகவே பரம் பொருளுடன் பொருந்தும்படி செய்கின்றது. இறைத் தன்மையைத் தருகின்றது. இந்த உணர்வினைப் பெற்ற அருளாளர்கள் அருளின் நிலைபெற்ற தன்மையையும், உயிரைப் படிப் படியாக பக்குவமடையச் செய்யும் ஆற்றலையும் அருளிலிருந்து நம்மை பிரித்து வைப்பது நமது அறியாமையே என்றும் உணர்ந்துகொள்கிறார்கள். திருவருளை நம்முடன் சேர்த்துக் கொள்வது நம்முடைய முயற்சியை ஒட்டியே உள்ளது என்பதும் தெளிவாகும்.

''பாசத்தி விட்ட தருளந்தப் பாசத்தின்
நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்
கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே'';

(திருமந்திரம்.........1802)

எனவேதான் அருளிலும் மேம்பட்டது யாதுமில்லை என்கிறது திருவருட்பயன்.

'அருளின் பெரிய(து) அகிலத்து வேண்டும்
பொருளின் தலைஇலது போல்''

(செய்யுள்-31)

ஒரு நல்ல பாற்கடலில் வசிக்கும் மீன் அந்தப் பாலைக் குடித்து தனது பசியைத் தீர்த்துக் கொள்ளாமல் அதனினும் சிறிய பிராணிகளை உண்டு மகிழ்வது போல உயிர்கள் உடலுடன் சேர்ந்து, உடல் இன்பத்தில் மூழ்கி, தாம் அருள் எல்லைக்குள் இருந்தும் அந்த அருளை அனுபவிக்காமல் நிற்குமாயின் அது அருளுக்கு இழப்பல்ல, உயிருக்கே இழப்பாகும்.

''பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்(து) அருள்
உயிர்கள்
மால்ஆழி ஆளும் மறித்து''.

(திருவருட்பயன்-செய்யுள் 34)

அருளாளர்கள் தாங்கள் பெற்ற இறை அனுபவத்தை பலவாறாக விளக்குகின்றனர். ''இறைவனைக் கண்டுகொண்டேனே'' என்று கூறுவது அவர்களுடைய இயல்பாகும். அவர்கள் காண்பது புறக்காட்சியாகவும் இருக்கலாம். அகக்காட்சியாகவும் இருக்கலாம். அண்டமெலாம் பரந்து நிற்கும் இறைவனை கருவி கரணங்கள் காணும் வகையில் அவர்கள் அனுபவித்ததுண்டு. அல்லது சீரிய தவத்தால், நோன்பால், யோகத்தால் தங்களுடைய உள்ளங்களிலே அவர்கள் இறை உணர்வினைப் பெற்று அனுபவிப்பதும் உண்டு. திருமூலர் பல மந்திரங்களில் தான் பெற்ற அனுபவத்தை கோடிட்டுக் காண்பிக்கின்றார். அவர் அனுபவித்த காட்சிகள் பெரும்பாலும் அகக்காட்சிகளாக இருந்துள்ளன. அதாவது, திருமூலர் இறைவனைத் தம்முள் தரிசித்துள்ளார். யோக சாதனையால் இறைவன் அருள்பெற்ற திருமூலர் திருவடிப் பேற்றினைத் தம்முள் ளேயே பெறுகிறார்.

''செப்புஞ் சிவாகமம் என்னும்அப்
பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே''.

(திருமந்திரம்.......74)

தன்னுள் இருக்கும் எல்லா ஆற்றலையும் குவிந்து, சீவ கரணங்களுக்கு இடம் கொடுக்காமல், பார்வதி தேவியோடு கூடிய பரமேஸ்வரனை இடைவிடாமல் தியானித்து, உடலைச் சார்ந்த கரணங்களைக் கடந்து, மறைந்து நிற்கும் பரம்பொருளைக் கண்டுகொண்டேனே என்கிறார் திருமூலர். இதிலும் அகக்காட்சியின் தொடர்பையே காணலாம்.

''தலைநின்று தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டுகொண் டேனே''
(திருமந்திரம்.....2597)

''இந்திரியங்களின் வயப்பட்டிருந்தேன். அவைகளால் தாக்கப்பட்டு கட்டுண்டு கிடந்தேன். என் மனதை என்னால் அடக்க இயலவில்லை. அப்போது இறைவன் என்னை அடங்கும்படியாக என் மீது தனது திருவடியை பதித்தான். எனது உள்ளொளியைப் பெருக்கி என்னை பேரின்பத்தில் திளைக்கச் செய்தான். நன்மைதரும் ஞான நடனத்தைப் புரியும் சிவபெருமான் என் உள்ளத்தில் நிலைபெற்று விளங்கி என்னை அசைவற்ற, ஒடுங்கிய நிலையில் இருக்கச் செய்தான்'' என்ற திருமந்திர அனுபவம் அகக்காட்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது.

''அடங்காத என்னை அடக்கி அடிவைத்
தடங்காமல் பரமானந்தத் தேஎன்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான்செய் துள்ளுட் படிந்திருந் தானே.''
(திருமந்திரம்....2741)

இறைவனும் சத்தியும் இணை பிரியாமல் நின்று ஊழிதோர் ஊழி உயிர்களெல்லாம் உய்யும்பொருட்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் போன்ற தொழில்களை நடத்தும் மேன்மையை என்னுடைய ஒளிமயமான அறிவில் உணர்ந்துகொண்டேனே என்கிறார் திருமூலர். இதுவும் ஒரு அகக்காட்சிக்கு சான்றாகும்.

''இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொடு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலுந் தாமாய்நின் றாடுகின் றாரே.''
(திருமந்திரம்......2768)

யோக மார்க்கத்தில் சென்று முழுமையைக் கண்டவர் திருமூலர். சிவமும் சக்தியும் நம்முள்ளே நடமாடுகின்றன. நமது ஆற்றலை புறப்பொருட்களில் வீண் செய்யாமல், தட்டி எழுப்பி யோக சாதனை வழியாக சிவத்துடன் இணைத்துக் கொள்ளுவது சிவானுபவம் பெறுவதாகும். சிவமாகிய மந்திரம் ஒளிவிடும் மந்திரம். சீவனும் ஒளித்தன்மை வாய்ந்ததே. சீவ ஒளியும், சிவ ஒளியும் பொருந்தி நிற்பது யோகத்தின் முடிவாகும். எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் நமது உள்ளத்திலும் வீற்றிருக்கின்றது. எந்த அருளானது உடலையும் உயிரையும் சேர்த்து, உயிரின் இயக்கத்திற்கு உதவி புரிகிறதோ அந்த அருளும் நமது உள்ளத்தில் வீற்றிருக்கின்றது. அந்த அருளின் தன்மையை நம்முள் விளங்கிக் கொள்வது இறைவன் இருக்கும் இடத்தை அறிந்துகொள்வதாகும். அந்த இறைவன் நமது உயிரில் உயிருக்கு உயிராக நிற்கிறான். நமது உயிரும் அறிவுமயம் என்று நமக்கு அறிவிக்கின்றான. அறிவுமயமான உயிர் பேரறிவான இறைவனுடன் இணைந்து கொள்வது நம்முடைய சூக்கும உடலாகிய சிற்றம்பலத்தில் நடைபெறுகிறது. இதை நான் அனுபவத்தால் கண்டுகொண்டேனே என்கிறார் திருமூலர்.

''நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே.''
(திருமந்திரம்....2770)


''பல காலம் எனது கருவி கரணங்கள் தங்களுடைய இயல்பான பணியைச் செய்து வந்தன. இறைவனுடைய அருள் கிட்டியது. புறக்கண்கள் மூடின. அகக்கண்கள் விழித்துக் கொண்டன. அகக்கண்களால் நான் பார்க்கும் பொழுது என்னுடைய தலைவனை, ஒப்பற்றவனை, பொன்போன்ற திருமேனியை உடைய, சடைபொருந்திய சிவபெருமானை என்னிடம் பொருந்தக் கண்டேன். 'நீயே அறிவுமயமானவன்' என்று சிவபெருமான் என்னுள் உணர்த்தி அருளுவதையும் கண்டேனே'' என்கிறார் திருமூலர்.

''மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலுந்
தன்னுற்ற சோதி தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்
என்னுற் றறிவனான் என்விழித் தானே''.
(திருமந்திரம்.......2859)

''பரம்பொருளாகிய இறைவன் அருள்மயமாக நின்று உயிர்களுக்கு நன்மையைத் தருகின்றான். அத்தகைய பராபரம் என் உள்ளத்தோடு ஒன்றி நிற்பதை நான் உணர்வுபூர்வமாக அறிந்துகொண்டேன். அத்தகைய சிவபெருமானை அடைவதாகிய வழியையும் நான் என்னுள் உணர்ந்தேன். பசு பாச ஞானத்திற்கு அப்பால் அடைய வேண்டிய பதி ஞானமே உயிரையும், இறைவனையும் ஒன்றாக்குகிறது என்றும் உணர்ந்து கொண்டேன். அந்த உணர்வு நிலையில் சிவனும் சீவனும் ஒன்றி நிற்பதை நான் அறிந்தேன். அவ்வாறு அறிந்த தன் காரணமாக சிவமயமான உணர்வினைப் பெற்று, சிவமயமாய் எங்கும் தானாகி சிவன் செயல் யாவையும் நோக்கி முக்காலத்து இயல்பையும் குறித்து, இழவு வந்த சோம்பல் நிலையில் நின்றேன்.'' இதுவும் திருமூலர் பெற்ற அனுபவமாகும்.

''ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல வூழிகண் டேனே.''
(திருமந்திரம்......2953)

அருளாளர்கள் பெறும் அருள் அனுபவம் அறிவின் அடிப்படையில் அமைந்ததல்ல. அவர்களுடைய கருவி கரணங்கள் இந்த அனுபவத்தில் ஈடுபடுகின்றன. ஆனால், இந்த கருவி கரணங்கள்தான் இந்த அனுபவத்தைப் பெற்றன என்று கூறிவிட முடியாது. உண்மையில் கருவி கரணங்கள் ஆற்றல் அற்ற நிலையில் நிற்கின்றன. அறிவின் எல்லைக்குள் தாக்காத ஒன்று கருவி கரணங்களைத் தாக்குகின்றது.





அவற்றைக் செயலற்ற நிலைக்குக் கொண்டு போகின்றது. மீந்தது உயிரெல்லாம் உணர்வெல்லாம் எல்லையற்ற பரம்பொருளில் மூழ்கி நிற்கின்ற அனுபவமாகும். அருளாளர்கள் கண்டேன் என்பார்கள். கேட்டேன் என்பார்கள். தொட்டேன் என்பார்கள். கடித்தேன், விழுங்கினேன் என்றும் கூறிக்கொள்வார்கள். இது போன்ற சொற்கள் அவர்கள் பெற்ற அனுபவத்தின் அளவையும், ஆழத்தையும் எடுத்துக் காட்டுகிறது. நாம் இந்த அனுபவத்தைப் பெறவில்லை. எனவே, அவர்கள் பயன்படுத்தும் சொற்கள் நமக்குப் புரிவதில்லை. அவர்கள் உள்ளத்திலே தோன்றும் திருவுருவம் நமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. இறைக் காட்சியை அவர்கள் காணும்பொழுது அவர்களுடைய உடலின் இயக்கத்தைப் பற்றிய நினைப்பு மறைந்துவிடுகின்றது. ஆனால், உடலின் சேஷ்டைகளிலேயே எப்பொழுதும் ஈடுபட்டிருக்கும் நமக்கு உள்ளத்தின் நிலை மறைந்து நிற்கிறது.

நமது ஊரிலிருக்கும் திருக்கோயிலில் ஆண்டுத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. சிவபெருமான் பார்வதி தேவியோடு விடையேறி திருவுலா வருகிறார். ஏராளமான பூக்களாலும், ஆபரணங்களாலும், பட்டாடைகளாலும் அலங்கரிக்கப்பட்டு இறைவன் திருவுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் காட்சியைப் பார்க்கிறார்கள். அவர்களுடைய உள்ளங்களில் பலவிதமான எண்ணங்கள் தோன்றுகின்றன. பலர் பூ வேலையையும் நகை உடை அலங்காரத்தையும் கண்டு களிக்கின்றார்கள். என்ன அழகான அலங்காரம் என்று கூறிக்கொள்கின்றார்கள். அவர்களுடைய கண்களுக்குச் சிற்பங்களின்எழிலும் அலங்காரத்தின் அழகும் மட்டுமே தென்படுகிறது வேறு சிலர் திருவுலாக் காட்சியைக் காண்கிறார்கள், திருக்கோலத்தைக் கண்டு மகிழ்கிறார்கள் ஆனால், அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. அவர்களுடைய பார்வையில் வடிவழகு மட்டும் நிற்கவில்லை. அவர்களுடைய உள்ளத்திலே ஒரு கருத்து எழுகின்றது ''இவன் நமக்கெல்லாம் இறைவன், நம்மை ஆண்டு கொண்டவன் அவனைத் தொழுவோம்'' என்று அவர்கள் கருதுகிறார்கள். கருதலுடன் அவர்களுடைய கைகள் இறைவனைக் கும்பிடுகின்றன. வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் இறை வடிவத்தைப் பார்க்கிறார்கள். அலங்காரத்தைப் பார்க்கிறார்கள். இறைவனைப் பார்க்கிறார்கள். அதற்கு மேலும் அவர்கள் உள்ளம் செல்கிறது. இறைவன் மீது அழிவிலாத அன்பினால், காதலினால் உந்தப்பட்டவர்கள் அவர்கள். அவர்கள் வெறும் கண்களால் மட்டும் காண வேண்டியதில்லை. கண்களை மூடிக் கொண்டாலும் அவர்களுடைய மனதிலே சிந்தையிலே, உள்ளத்திலே இறைவன் நிறைந்து நிற்கின்றான். எப்படி நிற்கின்றான்? காரைக்கால் அம்மையார் விடை அளிக்கின்றார். அவர் இறைவனின் திருவுலாவைக் காண வந்த மூன்றாவது வகையினைச் சேர்ந்தவர். இறைவனைத் தம்முள்ளேயே கண்டவர். அவருடைய

உள்ளத்திலே இறைவன் ஜோதிப் பிழம்பாகத் தோன்றுகின்றான். திருமாலும் அயனும் சென்று, முயன்று கண்டறியாத பிரபஞ்சத்தின் முதன்மைப் பொருளைக் காரைக்கால் அம்மையார் தனது சிந்தையுளே ஜோதியாகக் காண்கிறார்.

''நாண்பார்க்கும் காணலாம்
தன்மையனே: கைதொழுது
காண்பார்க்கும் காணல்ஆம்;
காதலால்-காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே
தோன்றுமே, தொல்உலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்''

(அற்புதத் திருவந்தாதி)

நமது நாயன்மார்கள் அனைவருமே இத்தகைய அனுபவத்தைப் பெற்றவர்கள். இறைவன் அவர்களுடைய உள்ளங்களிலே குடிபுகுந்திருப்பதும், அதை அவர்கள் உணர்ந்திருப்பதும் அல்லாமல் அவர்களுடைய வாழ்க்கையிலே நடந்த பல நிகழ்ச்சிகளுக்கு, அவர்களுடைய செய்கைகளுக்கு, அவர்களுடைய இயல்பான அணுகுமுறைகளுக்கு விளக்கம் காண்பது கடினம்.

ஞானசம்பந்தப் பிள்ளையார் திருக்குளத்தின் கரையில் நின்று அருள் அனுபவம் நேரம் வந்தடைந்தமையால் ''அம்மே! அப்பா!'' என்று அழத் தொடங்கியபோது சிவபெருமான் தேவியாருடன் அங்கே வந்து ஞானப்பால் அளித்தது சேக்கிழார் பெருமானின் வரலாற்று காட்சியாகும். திருக்குளத்தில் நீராடிவிட்டு பிள்ளையாரின் தந்தையாகிய சிவபாத இருதயர் ''யாவர் அளித்த பால் அமுதினை நீ உண்டாய்?'' என்று கோபிக்கும்போது ஞானப் பிள்ளையார் உணர்வரிய மெய்ஞானத்தை தாம் உணர்ந்த நிலையில், ஆனந்தக் கண்ணீர் கண்களிலிருந்து பாய, தனது சிறு திருவிரலை சுட்டிக்காட்டி, திருக்கோயிலில் அமர்ந்துள்ள இறைவனை எதிரில் காட்டி, தனது சொல்லொணா அனுபவத்தைக் கேட்டு பல உயிர்கள் உய்யும்பொருட்டு ''தோடுடைய செவியன்'' என்னும் திருப்பதிகம் பாடி ''எம்மை இது செய்தவன் பிரான் இவன் அன்றே'' என்று தந்தையாருக்கு அறிவிக்கின்றார். தனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் இவன் என்று கூறும் ஞானப்பால் உண்ட பிள்ளையார் தான் கண்ட புறக்காட்சிக்கு மேலாக தான் பெற்ற மெய் அனுபவத்தை சிறப்பித்து பேசுவது பிள்ளையாருடைய ஒப்புயர்வற்ற ஆன்மிக சாதனையை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

''விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ
விடைமேலே
பண்ணிறைந்த வருமறைகள் பணிந்தேத்தப்
பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினா னின்றாரை
யெதிர்காட்டி
யுண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத்
திருமொழியால்'

(திருத்தொண்டர்புராணம் 1972)

''செம்மைபெற வெடுத்ததிருத்
''தோடுடைய செவிய'னெனும்
மெய்ம்மைமொழிந் திருப்பதிகம் பிரமபுர
மேவினார்
தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித்
தாதையார்க்
''கெம்மையிது செய்தபிரா னிவனன்றே''
யெனவிசைத்தார்''

(திருத்தொண்டர்புராணம் 1974)

அப்பர் பெருமான் வாழ்க்கையிலும் அருள் அனுபவக் காட்சி நிகழ்கிறது. திருவையாற்றில் பெருமான் திருக்கயிலாயக் காட்சி பெறுகின்றார். சேக்கிழார் பெருமானின் திருவாக்குப்படி திருவையாற்றுத் திருக்கோயில் கயிலை மலையாக மாறுகிறது. சித்தர்களும், ஞானிகளும் நெருங்கி நிற்க, கணங்கள் போற்ற நந்தி தேவர் நடுவில் நிற்க, வெள்ளி மாமலையின் மீது பார்வதி தேவி அருகில் நிற்க சிவபெருமான் கயிலைக்காட்சி அருளினார். இந்தப் பெரும் காட்சியை அப்பர் அடிகள் கண்களால் பருகினார். பாடினார், ஆடினார், அழுதார், திருத்தாண்டகங்களால் போற்றித் துதித்தார். இவ்வாறு அப்பர் அடிகள் இறைவனை அனுபவித்துக்கொண்டு நின்றார். சிறிது நேரம் கழித்து கயிலைக் காட்சி இறையருளால் மறைந்தது. கா சி மறைந்ததால் அப்பர் அடிகள் மிக வருந்துகிறார். இதுவும் இறைவனுடைய திருவருளோ என்று வியந்து அப்பர் பெருமான் பதிகம் பாடுகின்றார். திருக்கயிலாயக் காட்சியின் தெளிவில் திருநாவுக்கரசர் சராசரங்களின் ஒருமைப்பாட்டினையும் அவற்றில் முழுமையாக இறையருள் பதிந்து இருந்த தன்மையையும் காண்கிறார். பரம்பொருளையே பற்றுக்கோடாகக் கொண்ட அப்பருக்கு இந்த உணர்வு ஏற்பட்டதில் வியப்பொன்றுமில்லையே.

இவ்வாறு அருளாளர்களுடைய அருள் அனுபவங்களை, அவர்கள் கண்ட காட்சியைத் தொகுத்துக்கொண்டே போகலாம். அனுபவங்கள் எத்தன்மையின ஆயினும் அடியார்களின் உள்ளங்கள் விதிவிலக்கில்லாமல் அருளே உலகை ஆட்டுவிக்கின்றது என்றும், அருளன்றி வேறொன்றுமில்லை என்றும், அருளாலேதான் மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையோர் என்றும் நினைந்து மகிழும் தன்மையைப் பெறுகின்றனர். காரைக்கால் அம்மையாரின் திருவாக்கு இதை நமக்கு அப்பட்டமாக அறிவிக்கின்றது.

''அருளே உலகெலாம் ஆள்விப்ப(து), ஈசன்
அருளே பிறப்பறுப்பது: ஆனால்-அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்,
எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ(து) எனக்கு''.

(அற்புதத் திருவந்தாதி)

—(தொடரும்.)



# விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்

செந்தமிழ்ச் சைவமணி கோ. சண்முகம், பி.காம்.

முற்றொடர்ச்சி

''நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே

(40—44)

ஓங்கி எழுகின்ற குண்டலினி சக்தி ஆகிய பாம்பை மூலாதாரத்திலிருந்து எழும்படி செய்து, அக்குண்டலினியில் கூடியிருக்கும் அசபை என்னும் மந்திரத்தை வெளிப்படுமாறு உரைத்து, மூலாதாரத்திலிருந்து பற்றி எரியும் ஞானக் கனலை மூச்சுக் காற்றால் மேலே எழுப்புகின்ற வழியை அறிவித்தருளி—

பாம்பு போன்ற வளைந்த சக்தியாக மூலாதார சக்கரத்தில் அசைவின்றிக் கிடக்கும் மூலசக்தியைத்தான் குண்டலினி என்பார்கள்.

இடைகலை, பிங்கலை, சுழுமுனைகளின் சுவாசத்தால் உண்டாகும் சத்தத்தையே அஜபா எனக் குறிப்பிடுவர். மூக்கிலிருந்து வெளியே போகும் காற்று 'ஹம்' என்ற ஒலியோடு செல்லும். பிரணாயாமம் செய்பவர்கள் இவ்விரு ஒலியையும் சிவோஹம் என்றும், ஊமை எழுத்து என்றும் அழைப்பார்கள். இம் மந்திரத்திலிருந்துதான் பேசும் மந்திரம் தோன்றியது. இம்மந்திரத்தையே விநாயகப் பெருமான் வெளிப்படையாக தமக்கு உபதேசித்தார் என்கிறார் ஔவைப் பிராட்டியார்.

இதை அவர் தம் குறளில்,

''அசபை யறிந்துள்ள அரைஎழு நோக்கில்
இசையாது மண்ணில் பிறப்பு''.

என்று குறிப்பிடுகின்றார்.

இடை பிங்கலையில் சென்று வரும் காற்றைக் கும்பிக்க அது மூலக்கனலை மேலே எழுப்பும். அப்போது குண்டலினி சுழுமுனை வழியே மேலேறும். அது சமயம் ஏற்படும் ஆன்ம உணர்வு, ஆதார சக்கரங்களையும் அங்கேயுள்ள தெய்வங்களையும் அறியும்.

''கால் பிடித்து மூலக் கனலை மதிமண்டலத்தின்
மேலெழுப்பிற் றேகம் விழுமோ பராபரமே.''

என்றார் தாயுமானவர் பராபரக் கண்ணியில்,

''மூலத் துதித்தெழுந்த முக்கோணச்சக்கரத்துள்
வாலைதனைப் போற்றாமல் மதி மறந்தேன்
பூரணமே''

என்றார் பட்டினத்தார் பூரண மாலையில்.

குண்டலினி சக்தியினை மூலாதாரத்திலிருந்து எழும்படி செய்து, அசபை என்னும் மந்திரத்தை வெளிப்படையாக உணர்த்தி, ஞானக் கனலை மூச்சுக் காற்றால் மூலாதாரத்திலிருந்து மேலே எழுப்புகின்ற நிலையினை தமக்கு விநாயகப் பெருமான் உணர்த்தியதை ஔவைப் பிராட்டியார் 40-44 அடிகளில் தெரிவிக்கின்றார்.

''அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயக் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக்கு அருளி''

(45—50)

பிரமரந்திரத்தில் ஊறும் அமுதத்தை உண்டாக்கும் நிலையையும் சூரிய கலையாகியபிங்கலை இயக்கமும், ஆம்பல் மலரின் தோழனாகிய சந்திரனின் கலையாகிய இடைகலைத் தன்மையையும் அறிவுறுத்தி, இவற்றுக்கு நடுவே சுழுமுனை நாடியினது பதினாறு கலை நிலைகளையும் உடம்பாகிய இயந்திரத்தில் உள்ள பல்வேறு உறுப்புகளின் நிலையையும் உணர்த்தியருளி ஆறுமுகமாகிய பருமைப் பொருளின் இயல்பையும், நான்முக நுண் பொருளாய் எங்கும் நிறைந்த இயல்பையும் எண்ணும் தியான இடமாக அடியேனுக்கு இனிது அருளி.

தலையின் நடுவில் ஆயிரம் இதழ்த் தாமரையில் இறைவன் வீற்றிருக்கின்றார். இம் மதி மண்டலத்தில் சுழன்று வீசும் தீச்சுவாலையால், உறுதியான தியான சமாதியில் உள்ளவர்களுக்கு உச்சியிலிருந்து அமுத தாரை பெருகும். இதைப் பருகுடவர்தம் குண்டலினிக் கனல் பிரமரந்திரம் வரை சென்று மூல ஆதாரத்தில் செல்லும். இதையே

''விந்துவும் நாதமும் மேருவில் ஓம்
சந்தியில் ஆன சமாதியில் கூடிடும்
அந்தம் இலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியில்தானிருந்தோனே''

என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

சந்திர ஒளியில் குமுதம் மலர்வதால் சந்திரனைக் குமுதச் சகாயன் என்கிறார் ஔவையார்.

உடல் சக்கரத்தின் உறுப்புக்கள் என்பது ஆறு ஆதார சக்கரங்களும் சூரிய சந்திர கலைகள் இரண்டும் ஆகும். உடம்பில்தொழில் செய்யும் சக்கரம் போல் பல உறுப்புகள் இருப்பதாலும், பிறப்பும், சக்கரம்போல் மாறி மாறி சுழன்று வருவதாலும் உடலை இயந்திரமாக உருவகம் செய்கிறார் ஔவையார்.

''இந்திரியம் ஈரைந்து மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்த கரணம் ஒரு நான்கும் ஆன்மாவும்
பந்தவச் சக்கரப் பாலதுவாகுமே.''

என்று இதனை விளக்குகின்றார் திருமூலர் அவத்தை பேதத்தில்.

யோகிகட்குச் சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும் எண்முகமாக இருக்கு .

இவைகளின் நுட்பத்தையே ஔவைப் பிராட்டிக்கு உணர்த்தினார் விநாயகப் பெருமான் என்பதனை 45-50 அடிகள் தெரிவிக்கின்றன.

(தொடரும்)

# வாசகர் எண்ணங்கள்

அன்புள்ள டாக்டர் அமிர்தலிங்கம்,

வாழ்த்துக்கள்.

தங்கள் அறிவும் ஆர்வமும், உழைப்பும் திருக்கோயில் இதழை மேலும் மேலும் சிறப்புக்கு உரியதாக ஆக்கி வருகிறது என்றே கருதுகிறேன். தங்கள் பணிகள் மேலும் மேலும் சிறக்கவும், திருக்கோயில் இதழ் மேலும் மேலும் வலிவும் பொலிவும் பெற்று வளரவும் என்னுடைய அன்பு நிறைந்த வாழ்த்துக்கள்.

வணக்கம். அன்புள்ள,

டாக்டர் பொற்கோ,
தலைவர்-தமிழ்ப் பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

—o—

ஏப்ரல் 91 திருக்கோயில் இதழில், ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் சீர்காழித் திருத்தலத்தில் தமிழிசை விழாவில் ''கர்நாடக சங்கீதத்தின் ஆதிமும்மூர்த்திகள்'' குறித்து ஆற்றிய உரையினை வெளியிட்டிருப்பது சிறப்புடையதாய் இருந்தது. தெய்வத்திரு தில்லை விடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை, சீர்காழி முத்துத்தாண்டவர், சீர்காழி அருணாசலக் கவிராயர் ஆகியோரின் ஆடும் பெருமான் கீர்த்தனைகளை அழகுற வெளியிட்டிருப்பது என்போன்றோர் இதயத்தைப் பெரிதும் மகிழ்விக்கிறது.

-இ. ஜெயராஜ்,ராயபுரம்
சென்னை-600013.

—c—

அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., அவர்களின் ''ஆதிமும்மூர்த்திகள்'' கட்டுரை வெகுபிரமாதம். ஆணையாளருக்கு அநேகவணக்கங்களைக் காணிக்கையாக்குகிறேன்.

-திருமுறைத்தொண்டர் நா.இராமமூர்த்தி.
மேற்குமாம்பலம், சென்னை-600033.

இறைவனுக்கு மிகவும் தொடர்புடைய இசையைப்பற்றியும், அதற்கு அரும்பாடு பட்டவர்களைப் பற்றியும் ஆணையாளர் அவர்கள் எழுதியிருப்பது அவசியமானதும், அற்புதமானதும் ஆகும்.

-சிதம்பர சூரியநாராயணன்,
பெரியகுளம், 626501.




# [41]

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

பானுகோபன் பொன் தேரில் ஏறிப் போருக்குப் புறப்பட்டான். நால்வகை அவுணச் சேனைகளும் வந்து சூழ்ந்தன. போர்ப் பறைகள் முழங்கின. தேர்களில் ஏற்றியிருந்த கொடிகள் சூரிய மண்டலத்தை மறைத்தன. போர்க்களத்தை அடைந்த பானுகோபன் அங்கே இறந்து கிடந்த தம்பியரைக் கண்டு எல்லையில்லாத துன்பமுற்றான். துயரம் வெஞ்சினமாயிற்று. ''பூதர்களையும் வீரவாகுவையும் கொல்வேன்'' என்று சபதம்கூறினான்.


அவுண சேனைகளும் பூதசேனைகளும் போர்க்களத்தில் ஒன்றோடொன்று எதிர்த்து அமர்புரிந்தன. அவுணர்கள் அழிவதைக்கண்ட பானுகோபன் சினமுற்றுச் சரமழை பொழிந்து பூதர்களைச் சின்னாபின்னம் செய்தான். பூதர்கள் மனம் பதைபதைத்துத் தோற்று ஓடினார்கள்.

வீரவாகுதேவர் முருகவேளைத் தியானித்து முன்னணிக்கு வந்து சேர்ந்தார். வில்லை வளைத்துக் கணை மழை பொழிந்து அவுணச் சேனைகளை அழித்தார். அதைப் பார்த்த பானுகோபன் வீரவாகு தேவர் திருமுன் வந்து ''தூதனே! உன்னைக் கொல்வதாகச் சபதம் செய்து வந்திருக்கிறேன். நீ இங்கிருந்து உயிருடன் திரும்பிச் செல்ல முடியாது'' என்று சூளுரைத்து ஆயிரம் கணைகளை விடுத்து அவர் மார்பைத் துளைத்தான். அதனால் சிறிது கிலேசமுற்ற வீரவாகுதேவர், பானுகோபன் புயத்தில் ஆயிரம் கணைகளை விடுத்தார். பானுகோபன் நூறு கணைகளை விடுத்து வீரவாகுதேவரின் வில்லைத் துணித்தான். வீரவாகு தேவர் ஒரு வேலாயுதத்தை எடுத்துப் பானுகோபன் நெற்றியை நோக்கி எறிந்தார். அவன் நெற்றியைத் துளைத்தது வேல். ஒரு கணம் பானுகோபன் அறிவிழந்து நின்றான். வீரவாகு தேவர் வாயு, அக்கினி சூரியன், பிரமன், விஷ்ணு அஸ்திரங்களை ஏவினார். பானுகோபனும் அதே தெய்வப் படைக்கலங்களை ஏவி அவற்றின் போக்கை மாற்றினான். மாயையினாலேயே வீரவாகுதேவரை வெல்ல வேண்டும் என்று கருதி, வீரவாகுதேவருக்கு நாற்புறமும் தேருடன் மாயமாக மறைந்தே சுற்றிச் சுற்றி வந்து கணைமழை பொழிந்தான். வீரவாகு தேவர் ஞானாஸ்திரத்தினை விடுத்தார். ஞானம் வந்தவுடன் மாயை தானே ஒழிந்தது. பானுகோபன் மாயை ஒழிந்து விண்ணில் வெளிப்பட்டு நின்றான்.

அவனை நோக்கிய வீரவாகுதேவர் 'வஞ்சகனே! இனி நீ என்னிடமிருந்து தப்ப முடியாது. உன்னை நான் இங்கேயே கொல்வேன்'' என்று கூறித் தேருடன் ஆகாயத்தில் சென்று கணைகளைச் சொரிந்தார். நீரும் நெருப்பும் மாறிப் போராடுவதுபோல் இருவரும் போர் செய்தார்கள். அவர்களுடைய தேர்கள் இரண்டும் ஓர் இமைப்பொழுதிலும் ஆயிரத்து நூறு கோடி சாரிகைகள் திரிந்தன. அவர்கள் விடுத்த பாணங்கள் உலகெங்கும் திரிந்தன; இவர்களுடைய போரால் கடல்கள் வற்றின; மேகங்கள் கரிந்தன; திக்கஜங்கள் எரிந்தன; உடுக்கள் பொரிந்தன; அண்டங்கள் வெடித்தன. அமரரும் ஏனோரும்இறும்பூதுற்று, ''இவரைப்போல் போர் செய்தவர் யாவருளர்? இவருக்கிணை யாவருளர்'' என்று புகழ்ந்தார்கள்.

பானுகோபன் கடும்கோபம்கொண்டு பிரமன் முன்னாளில் தனக்கு அளித்த வேற்படையையெடுத்து விடுத்தான். அதனைத் தடுப்பதற்காக வீரவாகுதேவர் ஆயிரங்கோடி பாணங்களை ஏவினார். அந்தப் பாணங்களை அழித்த பிரம்மாஸ்திரம் விண்வழியே விரைந்துவந்தது. வீரவாகுதேவர் கந்தக் கடவுளைத் தியானித்து சிவபெருமான் தந்த வாட்படையை எடுத்து வீசினார். அது பிரம்மாஸ்திரத்தை வீழ்த்தியதைக் கண்டு, தேவர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். வீரவாகுதேவர் வாளை உறையில் இட்டார். பானுகோபன் வாளை உருவிச் சிங்க ஏறுபோல் பாய்ந்து வீரவாகுதேவரின் வில்லைத் துணித்தான்.

வீரவாகு உருத்திரரைப் போல் உத்தண்டமாகச் சினந்து வந்தார். தமது வாளை எடுத்து எதிர்த்துப் போராடினார். அக்கினியும் இயமனும் போராடுவதைப்போல் அவர்கள் இருவரும் வாட்போர் செய்தனர். கால்கைகளைத் துணிக்கக் குறி வைத்து வாளை வீசினார்கள். சூறைக் காற்றினைப்போல் சுற்றினார்கள். பானு கோபன் தான் கற்ற வாள் வித்தையின் வலியால் வீரவாகு தேவருடைய வாளை விலக்கி அவருடைய தோளில் வெட்டினான். அவருடைய தோளினின்றும் உதிர வெள்ளம் பெருகியது. பானுகோபன் செருக்குடன் நின்றிருந்தான். வீரவாகுதேவர் வேலாயுதக் கடவுளைத் தியானித்து வலிமை முழுவதையும் திரட்டி வாளை வீசி பானுகோபனுடைய வலத்தோளைத் துணித்தார். வெட்டுண்ட வலக்கையோடு சேர்ந்து வீழ்கின்ற வாட் படையை இடக் கையாற்பறித்த பானுகோபன் அடங்காத கோபத்துடன் எதிர்த்துப்



போர் செய்ய முயன்றான். வீரவாகு தேவர் அவனது இடத்தோளையும் வெட்டினார். பானுகோபன் மாயப் படையை விட நினைத்தான்.

நினைப்பு நினைப்பாகவே முடிந்ததேயன்றி நடப்பாக மாறவில்லை. வீரவாகு தேவர் பானுகோபனது தலையை அனாயாசமாக அறுத்தெறிந்தார். பானுகோபனுடைய தலையும் புயங்களும் உடம்பும் மண்ணில் வீழ்ந்தன. அளவற்ற ஆற்றல் பொருந்திய மாவீரனின் உடல் ஆற்றலையெல்லாம் இழந்து வெறும் சவமாக மண்ணில் சாய்ந்தது. மண்ணாசை கொண்டவன் மண்ணொடு மண்ணாயினன். கதிரவனையும் கலங்கச் செய்த அவுணகுல்ச் சிம்மத்தின் அழிவு கண்டு முனிவரும் தேவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்; வீரவாகுதேவர் மீது பூமழை பொழிந்தனர். அரக்கர் குலச் சூரியன் அஸ்தமித்தவுடன் கதிரவனும் பன்னாட்களாக உள்ளூரக் கொண்டிருந்த கவலை தீர்ந்து கனன்று ஜொலித்தான்.

சூரன் தந்த அதிசூரனாகிய அரசிளங்குமரன் பானுகோபன்வீரசுவர்க்கம் எய்தியதும் வீரவாகுதேவர் ஆகாயத்திலிருந்து தல்த்து குவந்தார். துணைவர்களை நோக்கி, 'மாயங்கள் செய்த பானுகோபன் அழிந்தான். நமது சபதம் முடிந்தது. நாம் சேனைகளோடு சென்று முருகவேளைச் சேவிப்போம்'' என்று மன நிறைவுடன் கூறினார்.

பூதர்கள் ஜயசங்கம் ஊதிக்கொண்டு பாசறை சென்றடைந்தனர். வீரவாகுதேவர் முருகப்பெருமானின் கழலிணைகளில் பலமுறை பணிந்து எழுந்தனர். முருகப்பெருமான் தம்பியை அணைத்துக்கொண்டார். அப்போது அத்தவயோகநாதனின் கண்களிலிருந்தும் ஆனந்த பாஷ்யம் பெருகிற்றாம். ''தம்பி, வீரவாகு! உன் வீர பராக்கிரமம் கண்டு நாம் மகிழ்ந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று அருளிக் கேட்டார் ஆறுமுகப்பெருமான்.

வீரவாகுதேவர் முருகப் பெருமானிடம் இந்திர பதவி கேட்பாரோ, பிரம பதவி கேட்பாரோ என்று அப்போது இந்திரன், பிரமன், குபேரன், விஷ்ணு முதலியோர் நடுங்கிக் கொண்டு நின்றார்களாம். ஆனால் வீரவாகு அப்படியெல்லாம் கேட்டுவிடுவாரா? அவர் என்ன கேட்டார்?

''கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங்
குறியேன்;
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும்
வெஃகேன்;
மால யன்பெறு பதத்தையும் பொருளென
மதியேன்
சால நின்பதத் தன்மையே வேண்டுவன்
தமியேன்''

''செல்வத்தினால் அல்லல் விளையும்; ஆதலால் குபேர சம்பத்து எனக்கு வேண்டாம்' என்று வீரவாகுதேவர் கூறியதைக் கேட்ட குபேரன் நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டான். 'இந்திரலோக ஆதிபத்தியத்தைக் கனவிலும் கருதமாட்டேன்' என்று அவர் கூறியதைக் கேட்ட இந்திரன் ''பிழைத்தேன்'' எனறு ஆசுவாசம் செய்து கொண்டான். பிரம, விஷ்ணுக்களின் பதவியும் வேண்டாம் என்று கூறிய வீரவாகு அயனுக்கும் திருமாலுக்கும் விச்ராந்தி தந்தார். ''தேவரீர் திருவடியில் என்றும் மாறாத அன்பு வேண்டும்'' என்று அவர் வேண்டியபோது அமரர் அனைவரும் உருகிவிட்டனர்.

## தொண்டு செய்திடுக

**எல்லோரிடமும் அன்பு செலுத்துங்கள். எல்லோருக்கும் சேவை செய்யுங்கள். இலட்சக்கணக்கான மந்திரங்களை ஜபிப்பதைவிட அதிகப்பலனை இந்த சாதனை தந்துவிடும்.**

—ஸ்ரீசத்யசாயிபாபா.

---

இறைவன் திருவடிகளிடத்து மாறா அன்பு பூணுவதை விடப் பெரும் பதவி தருவது ஒன்றுமில்லை. ஆன்மாவாகிய கொடிக்கு இறைவனுடைய திருவடியே கொழுகொம்பாகும். இறைவனடி சேர்ந்தார்க்கே துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் உண்டாகும். இறைவனடி சேர்ந்தாரே பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; இறைவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடர் எய்தாது எனத் தமிழ் மறை கூறும். 'காவிக் கமலக் கழலுடன் சேர்ந்தெனைக் காத்தருளாய்' என்பது கந்தரலங்காரம்.

•

வீரவாகுதேவர் கேட்ட இந்த வரம் முத்தியைக் காட்டிலும் சிறந்தது. ''உதிக்காது உடையவர் திருவடி பக்தி. உதித்தால் அதுவே முத்தி'' என்று பிரகலாதன் தமக்கே சொல்லிக் கொண்டார். வீரவாகுவோ அதனை முத்தியிலும் பெரிதாகக் கருதினார். ''அடியேன் உய்யும்பொருட்டு பக்தி என்ற வரம் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

''தம்பி; உனக்கது தந்தனம்'' என்று அருளிச் செய்தார் முருகப்பெருமான்.

''அந்த நல்வரம் முத்தியின் அரியதொன்றதனைச்
சிந்தை செய்திடு தவத்தரும் பெறுகிலர்; சிறியேன்
உய்ந்திடும்வகை அருள்செய வேண்டுமென்றுரைப்ப
எந்தை கந்தவேள் ''உனக்கது புரிந்தனம்'' என்றான்.''

மற்றைய துணைவர்கள் யாவர்க்கும் முருகக் கடவுள் நல்லருள் புரிந்து இருக்க போக விடை கொடுத்து அனுப்பினார். வீரவாகுதேவரும் மற்றவர்களும் அவரவர் உறைவிடங்களுக்குச் சென்றார்கள்.

அவுண தூதர்கள் பானுகோபன் வதையுண்ட செய்தியை தயங்கித் தயங்கிச் சூரனிடம் கூற அசுரேந்திரன் உடலெல்லாம் வியர்த்து அறிவு சோர்ந்து மயங்கினான். அக்கணத்தில் அவன் உயிரே ஊசலாடியது. மாண்டவன் போல் வீழ்ந்தான். பின்னர் ஒருவாறு தெளிந்து எழுந்து பானுகோபனை நினைத்து நினைத்துப் பலப்பல கூறிப் புலம்பினான்.

''புத்திரர்கள் பலர் இறந்தும் நீ ஒருவன் இருக்கின்றாய் என்று உள்ளத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தேன். உன்னையே உற்ற துணை என்று கருதினேன். உற்ற துணையாகத்தானே நீயும் எனக்கு நன்மொழி கூறினாய். ஆனால் உனது அறிவுரையை கேளாமல இழந்தபின் இப்போது நான் மட்டும் கருமத்தைப் பின்பற்றித் தப்பப் போவதில்லை. போருக்குச் செல்லத்தான் போகிறேன்.

''கண்மணி! உனக்கு அஞ்சி எப்பொழுதும் உன்னையே மலரேந்தி வழிபட்ட தேவர்கள் இப்பொழுது மகிழ்ந்தனரோ! உனக்குப் பயந்து துயிலாது உழன்று கொண்டிருந்த திருமால் இனி நன்றாக சேஷசயனத்தில் உறங்குவான். சிறு வயதில் நீ சிறை பிடித்த சூரியனும் மகிழ்ச்சியுடன் வானில் சஞ்சாரம் செய்வான். என் கண்மணியே! மந்திரிகளும் மற்றப் புதல்வர்களும் மாண்டு என்னை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தியபோது நீதான் என் துயர் துடைக்க இருந்தாய், அண்டங்களையெல்லாம் ஆளும் நான் என் [illegible] கண்ணீரைத் துடைக்க யாருமில்லாது அவலமாகிவிட்டேனே. இன்னமும் நான் இறக்கவில்லையே! பரமேசுவரனாலன்றி எனக்கு அழிவு கூடாது என்று வரம் பெற்றேனே! அதற்கான தண்டனையாகவே இன்னமும் உயிர் வாழ்கிறேனோ?'' என்று புலம்பிஅழுதான் சூரபன்மாசுரச் சக்கரவர்த்தி!

போர்க்களத்தில் இறந்து கிடந்த பானுகோபனின் உடலை அவுணர்கள் சூரபன்மன் முன் கொண்டுவந்து கிடத்தினார்கள். உயிரற்ற மகனின் உடலைக் கண்ட சூரனின் ஆவேசம் மிகுந்தது. ''மகனே! உன்னைக் கொன்ற அந்த வீரவாகுவைக் கொன்றாலன்றி என் மனம் அமைதியுறாது'' என்று சூளுரைத்துத் தேம்பினான். சூரனின் ராணியான பதுமகோமளையின் ஆறாத்துயரை எப்படி விவரிப்பது?

அரண்மனையில் மட்டுமின்றி வீரமகேந்திரமெங்கும் புலம்பல் ஒலிமிகுந்தது. கணவன் இறந்ததற்காகப் பல அரக்கிகள் அழுதார்கள். உடன் பிறந்தவன் போய் விட்டானே என்று பல அரக்கிகள் அழுதார்கள்.

சூரபன்மன் ஒருவாறு தேறினான். 'எதிரிகள் யாவரையும் இன்றைக்கே கொல்வேன். அவர்களுடைய உதிரத்தைச் சொரிந்து ஒருவேள்வியைச் செய்து இறந்து கிடக்கும் என் மகனை எழுப்புவேன். அவனுடைய உடம்பை ஓரிடத்தில் சேமித்து வைத்துப் பத்திரமாகப் பாதுகாத்து வாருங்கள்'' என்று அவுணர்களுக்கு உத்தரவிட்டனன் சூரபன்மன்.

எனினும் அன்றைய மனநிலையில் தானே அன்று போருக்குச் செல்வது பலன் அளிக்காதோ என்றும் சூரன் கருதினான் போலும், சில தூதர்களை அழைத்தான்.

'' தூதர்களே, நம் எதிரிகளை எனது தம்பி சிங்கமுகனுக்கு இரையாக்குவேன். நீங்கள் ஆசுர நகரம் சென்று என் அருமைத் தம்பியை அழைத்து வாருங்கள்'' என்றான்.

**(தொடரும்)**

# மந்திரமாவது நீறு

**திருமுறைத்தொண்டர் நா. ராமமூர்த்தி**

மந்திரமாவது நீறு என்ற திருநீற்றுப் பதிகம் திருஞானசம்பந்தர் திருஆலவாயில் அருளியது. அரசன் கூன்பாண்டியனுக்கு பீடித்த வெப்பு நோயை முற்றிலும் குணப்படுத்திய பெருமை வாய்ந்த அற்புதத் திருப்பதிகம்.

சமணர்கள் பல முயற்சி செய்தும் மன்னன் குணமடையாமல், மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் மன்னனிடம் திருஞானசம்பந்தரைப் பற்றிச் சொல்ல, அந்த பெயரைக் கேட்டவுடனேயே அரசனுக்குச் சிறிது ஆனந்தம்மலர, ஞானசம்பந்தரை அங்கு அழைத்துவருகிறார்கள். அவர் அரசன் அருகில் அமர்ந்து ஆலவாய்ச் சொக்கனை வணங்கி இந்த அற்புத திருநீற்றுப் பதிகத்தைப் பாடியருள, மன்னனின் வெப்பு நோய் அறவே நீங்கிற்று. அத்தகைய பெருமை வாய்ந்தது இந்தத் திருப்பதிகம்.

உஷ்ணத்தினால் வரும் எந்த நோயானாலும் சரி, ஜுரம், அம்மை நோய், தீராத புண், எரிச்சல், வயிற்றுவலி எதுவானாலும் இந்த ''மந்திரமாவது'' என்ற திருநீற்றுப் பதிகத்தைப் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்து திருநீற்றைப்பூசி சிறிது திருநீற்றினை தண்ணீரில் கலந்து சாப்பிட நோய் உடனே குணமாகும். எங்கள் இல்லத்திலும் உறவினர்கள் வீட்டிலும் இதனால் பயனடைந்துள்ளோம். ஒரு நண்பருக்கு உஷ்ணத்தால் மூல வியாதி என்ற கொடிய நோயால் தொல்லை. அவர் இந்த திருநீற்றுப் பதிகத்தை முழு நம்பிக்கையுடன், பாராயணம் செய்து குணமடைந்து விட்டதாகச் சொன்னார்.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான்
திருநீறே. 1.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பதுநீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான்
திருநீ' ற.2.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை
கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திருவால வாயான்
திருநீறே .4.

பூச வினியது நீறு புண்ணியமாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக்
கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான்
திருநீறே .5.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்
வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான்
திருநீறே .6.

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான்
திருநீறே 7.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான்
திருநீறே 8.

மாலொ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள்தங்கள் மெய்யது வெண்
பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான்
திருநீறே 9.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்ட
மும் கூட
கண்திகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்டபொருளா ரேத்தும் தகையது
நீறு.

அண்டத் தவர்பணிந்தேத்தும் ஆலவாயான்
திருநீறே 10.
ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு
நீற்றை
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்
பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின
தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்
தாமே.11.




டாக்டர் த. அமிர்தலிங்கம் [28]

''ஆம்எனில் ஏழிரண் டாண்டில் ஐயநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை என்னின் கூர்எரி
சாமிது சரதம் நின்ஆணை சாற்றினேன்''

''இராகவ! உம்மேல் ஆணை! பதினான்கு ஆண்டுகள் நிறைவுறுவதற்கு முன்பாக அயோத்தி நீ திரும்பவந்து அரசேற்கவேண்டும். இல்லாவிட்டால் நான் அக்கினியில் பாய்ந்து உயிர் மாய்த்து கொண்டு விடுவேன். இது சத்தியம்'' என்று பரதன் நிபந்தனை விதிக்க, தம் புகழைப் போலவே பரந்திருக்கும் சிறந்த தயாள குணமும் கொண்டிருப்பவரான இராமர் அந்நிபந்தனைக்கு உடன்படுகிறார் என்பதைச் சென்ற இதழில் கண்டோம்.

''தன்புகழ் தன்னிலும் பெரிய தன்மையான்'' எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் புகழும் இராமர் இவ்வாறு இசைந்த பிறகும்கூட பரதன் இராமரைப் பிரிந்து செல்ல மனத் துணிவு கொள்ளவில்லை. இராமரின் திருவடித் தலங்களைப் பற்றிக்கொண்டு விம்மிடும் பரதனின் சிந்தையில் ஒரு சீரிய எண்ணம் மின்னல் போல் பளிச்சிடுகிறது. ''கண்டு கொண்டுவிட்டேன். அயோத்தியை ஆளும் அரசரை நான் கண்டு கொண்டு விட்டேன். உம் திருவடிகள் தாங்கிநிற்கும் பாதுகைகளே இனி இப்பாரினை ஆளும் அரசர்; அவற்றை எனக்குத் தந்தருளுவீராக'' என்று பரதன் வேண்ட, இராமரும் இம்மைக்கும், மறுமைக்கும், எம்மைக்கும் பேறுகள் அனைத்தும் நல்கிடவல்ல தம் பாதுகைகளைப் பரதனுக்குத் தந்தருளுகிறார்.

''விம்மினன் பரதனும் வேறுசெய்வ தொன்று
இன்மையின் அரிதென எண்ணி ஏங்குவான்
''செம்மையின் திருவடித் தலம் தந்தீக'' என
எம்மையும் தருவன இரண்டும் நல்கினான்''

இராமபிரானின் அடித்தலம்இரண்டையும் அயோத்தி அரசாளும் முடித்தலம் இவை என்று அகமகிழ்வோடு வாங்கிச் சூடிக் கொள்கிறான் பரதன். ''எல்லோரும் கேளுங்கள், இராகவன் வனமாளும் பதினான்கு ஆண்டுக் காலமும் அயோத்தி நகரை ஐயனின் இவ்வடித் தலங்களே அரசாளும். இராமருடன்தான் இனி அயோத்தியில் அடியெடுத்து வைப்பேன். அது வரையில் அயோத்தி எல்லையில் அமைந்து விளங்கும் நந்தி எனும் கிராமத்தில் தங்கித் தவவாழ்வு வாழ்ந்திடுவேன்'' என்றுஎல்லோர்க்கும் அறிவித்து இராமபிரானைத் தொழுது பிரியா விடைபெறுகிறான் பரதன்.

இராமரின் பாதுகைகளைத் தலைமேல் தாங்கி பரதன் முன் செல்ல, சத்ருக்கனனும், தாய்மார்களும், வசிட்டர் முதலான முனிவர்களும், அமைச்சர்களும், அரசப் பரிவாரங்களும், அளவிலாத மக்கள்கூட்டமும் பரதனைப் பின்தொடர்கின்றனர். இராமரை மீண்டும் தரிசிக்கும் பேறுபெற்ற குகனும் பரதனுடனே வந்து சிருங்கி பேரத்தில் தங்கிவிடுகிறான். பாரத்துவாசர் இராமரை ஆசீர்வதித்துத் தம் ஆசிரமத்திற்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

அதிகாரமிகு பதவிசுகமே பெரிதென்று மதித்து, பெற்றவர் முதலானநெருங்கிய சுற்றத்தாரையும் பலிவாங்கும் கலிகாலம் இக்காலம். இத்தகைய கொடிய கலிகாலத்தில் வாழக் கூடிய நமக்கு நிம்மதியும், நீடித்து நிற்கும் நிலைத்த நற்புகழையும் தரவல்லது பதவி வெறியன்று; தியாக நெறியே என்பதைத் தெளிவுபடுத்துகிறார்கள் திரேதாயுகத்து அவதாரப் புருசர்களான இராமரும் பரதரும். பரதன் தமக்கு ஆக்கிய அரசை இராமர் ஏற்காததும், இராமபிரானாரின் பாதுகைகளையே அரசராக பரதன் அறிவிப்பதும் எத்தகைய மகத்தான தியாகங்கள்!

''நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக்கோல் முறை செலுத்த சிந்தையான்
இந்தியங்களை அவித்து இருத்தல் மேயினான்
அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணினான்''

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர், பரதனின் அருங்குணச் சிறப்பைப் போற்றி உரைத்திடக் காண்கிறோம்.

அயோத்தியின் எல்லையில் நந்தி கிராமத்தில் ஒரு பர்ணசாலை அமைத்து அதில் தங்கிக் கொண்டுவிடும் பரதன், இராமபிரானின் பாதுகைகளைச் சிம்மாசனத்தில் வைத்து, இராமர் சூட வேண்டிய மகுடத்தையும் அப்பாதுகைகளுக்கே சூட்டி, இராமபிரானின் பணியாளாகப் பாராளும் புனித தவத்தைத் தொடங்குகிறார். இராமர் கானகத்தில் என்ன கஷ்டம் அனுபவிக்

கிறாரோ என்று கவலையில் இரவுபகலாகக் கண்ணீரைப் பெருக்குகிறார் பரதாழ்வார்.

பாதுகாபட்டாபிசேகத்திற்குப் பின்னணியாக அமைந்த அடிப்படை காரணம் ஒன்றையும் இங்கு நாம் அறிந்து இன்புறுவோம். திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமால் ஒரு நாள் வழக்கத்திற்கு மாறாகத் தம் பாதுகைகளைப் பாம்பணைமேல் தலைமாட்டில் விட்டுப் பள்ளி கொண்டார். கால்மாட்டில் இருக்க வேண்டிய பாதுகைகள் தலைமாட்டில் இருக்கவே திருமாலின் திருமுடி பாதுகைகளைக் கோபித்துக் கொண்டது. ''ஏ பாதுகையே! உனக்கு என்ன ஆணவம் இருந்தால் எனக்குச் சமமாக வந்து என்னருகில் வீற்றிருப்பாய்? போ வழக்கமான உன்னிடத்திற்கு'' என்று திருமுடி பாதுகையை விரட்டியது. ''சுவாமிதான் என்னை இங்கே விட்டுப் பள்ளி கொண்டார். இதில் என் குற்றம் என்ன இருக்கிறது?'' என்று பாதுகை விளக்கம் தெரிவித்தும் கூட, திருமுடி தன் சீற்றம் தணிந்திலது. ''சுவாமியே விட்டிருந்தாலும் நீ இங்கு இருப்பது குற்றம் குற்றமே! போ உன்னிடத்திற்கு'' என்று திருமுடி பாதுகையை விரட்டியது, திருமாலின் சங்கும் சக்கரமும்கூட திருமுடிக்கு ஆதரவாகச் சேர்ந்து கொண்டு, பாதுகையை விரட்ட ஆரம்பித்தன.

மிகுந்தபுண்ணியம் செய்த முனிசிரேட்டர்களே தத்தம் புண்ணியம் காரணமாக திருமாலின் திருமுடி ஆகவும், சங்கு, சக்கரமாகவும், பாதுகை ஆகவும் விழுமிய பேறு பெற்றனர். திருமாலின் திருமுன்னிலையில் அடியார்கள் யாவரும் சமம் என்று உணராமல் அவைகள் தம்முள் பேதம் கண்டு விவாதமும் புரியவே துயில் உணர்ந்தெழுந்த திருமால் அடுத்துவரும் தம் இராமாவதாரத்தில் பெருமைமிகுதம் திருவடிகள் தாங்கும் பாதுகையைக் குறைத்து மதிப்பிட்ட திருமுடி பதினான்கு ஆண்டுகள் பாதுகைமேல் வீற்றிருக்கவும், திருமுடிக்குப் பரிந்து வாதிட்ட சக்கரமும், சங்கும் முறையே பரதனாகவும், சத்ருக்கனனாகவும் பிறந்து பாதுகைகளைப் பாதுகாத்து வரவும் திருவருள் பாலித்தார். இதனாலேயே இராமகாவியத்தில் பாதுகாபட்டாபிசேகம் ஒரு சிறப்பான அம்சமாக இடம்பெறுகிறது என்பதை நாம் அறியவேண்டும்.

பரதன் முதலானோர் விடைபெற்றுச் சென்றபின் இராமர் தொடர்ந்து சித்திரகூடத்தில் தங்கியிருக்க விரும்பிடவில்லை. சித்திர கூடத்திலேயே தொடர்ந்து தங்கியிருந்தால் அயோத்தி மக்களும், உறவினர்களும், நண்பர்களும் அடிக்கடி தம்மைக் காண வரக்கூடும், அயோத்திற்குத் திரும்பிவிட வற்புறுத்தவும் கூடும் என அஞ்சும் இராமர் அங்கிருந்து தென்திசையாகத் தம் பயணத்தைத் தொடர்கிறார். அவ்வாறு வரும் வழியில் பழமரங்கள் நெருங்கியிருக்கும் ஒரு சோலையில் அத்திரி முனிவர்தம் ஆசிரமம் அமைந்து இருப்பதை அறிந்து அளவிலா ஆனந்தம் அடைகிறார் இராமபிரான்.

அத்திரி முனிவர் பிரமகுமாரர்களில் ஒருவர். காமம், வெகுளி, மயக்கம் எனும் குற்றங்கள் மூன்றையும் அறவே கடிந்த தவச் செல்வர். ஆதலால் அத்திரிமுனிவர் என்பது அவருக்குப் பொருத்தமான பெயராகவே அமைந்துள்ளது. சப்தரிசிகளில் முன்வைத்து எண்ணப் பெறும் அத்திரிமுனிவர்தம் ஆசிரமத்திற்கு இராமபிரான் தம் தேவியுடனும் தம்பியுடனும் எழுந்தருள, அத்திரி முனிவர் தாமும் தம் மனைவியான கற்பிற் சிறந்த அனசூயாதேவியோடு வந்து இராமரை எதிர்கொண்டு வரவேற்கிறார். சகலதேவர்களும், எல்லா புண்ணிய உலகங்களும் தம்முடைய ஆசிரமத்திற்கு வருகை தந்தால் அது தமக்கு எவ்வளவு ஆனந்தத்தை உண்டாக்குமோ அவ்வளவு பேரானந்தமுற்று இராமலக்குவனரையும் சீதையையும் உபசரித்து மகிழ்கிறார்கள் முனிதம்பதிகள்.

அனசூயாதேவி தம்மைச் சோதிக்க ஒரு சேர வந்த மும்மூர்த்திகளைத் தம் கற்பின் மகிமையால் குழந்தைகள் ஆக்கித் தொட்டிலில் இட்டு வளர்த்த சிறப்பினைக் கொண்டவர். தாம் மகாபதிவிரதையானபோதும் அதனால் மனதில் சிறிதும் கர்வம் இல்லாதவர் என்பதால் அவருக்கும் அனசூயா எனும் பெயர் பொருத்தமாகவே அமைந்து விளங்குகிறது. மும்மூர்த்திகளின் சோதனைகளை வென்று சாதனைபடைத்தவரான அனசூயாதேவி, சீதாதேவி இனி இக்கானகத்தில் காணவிருக்கும் சோதனைகளையும் உய்த்து உணர்ந்துகொண்டு விடுகிறார் போலும்! நாயகனுடனே நாடு விட்டுக் காடுவந்த சீதையின் அருங் குணத்தைப் போற்றிப் புகழ்ந்து, அவளுக்குக் கற்பின் சிறப்பையும் உபதேசித்து ஆசிர்வதிப்பதோடு, தேவதச்சன் விசுவகர்மாவால் உண்டாக்கப் பட்ட என்றும் மாசுபடியாத பட்டாடையும் சீதைக்கு அணிவிக்கிறார். திவ்வியமான இரு காது குண்டலங்களையும், பரிமளக் கலவைப் பூச்சு முதலானவற்றையும் சீதைக்கு அளித்து அழகுக்கு அழகு செய்து அகமகிழ்கிறார் அனசூயாதேவி.

அத்திரிமுனிவர்தம் ஆசிரமத்தில் வழி நடந்து வந்த வருத்தமெல்லாம் தீர இளைப்பாறி, அறுசுவை விருந்தும் உண்ட பிறகு சீதையுடன் தண்டகவனம் நோக்கிப் பயணமாகிறார்கள் இராமலக்குவனர்கள். இட்சுவாகு மன்னனின் புதல்வர்களில் ஒருவன் தண்டகன். இவன் கூடா ஒழுக்கம் காரணமாகத் தன் தந்தையாலேயே தன் நாட்டைவிட்டு விரட்டப்பட்டான். தண்டகன் தென்னாடு வந்து அங்கொரு பகுதியைக் கைப்பற்றி அரசாண்டு வந்தபோது, அவன் சுக்கிராச்சாரியாரின் புதல்வி ஒருத்தியைத் தகாத முறையில் காதலித்துள்ளான். அதனால் கோபமுற்ற சுக்கிராச்சாரியார் தண்டகன் அழியுமாறும், அவன் நாடு மணல் மாரி பெய்து பாழாகுமாறும் சாபம் தந்துள்ளார். வளநாடாக ஒரு காலத்தில் திகழ்ந்து சுக்கிராச்சாரியாரின் சாபத்தால் வல்லரக்கர்கள் வாழும் கொடிய கானகமாக மாறிப்போன தண்டகாரண்யத்திற்குத் தான் வந்து சேர்கிறார்கள் இராமலக்குவனர்கள்.

தண்டகவனத்தில் விராதன் எனும் கொடிய அரக்கன் ஒருவன் வாழ்கிறான். அவன் ஐம்பெரும்பூதங்களும் ஒரு வடிவு கொண்டது போன்ற வடிவமும், இடியைப் போன்ற குரலும் கொண்டவன். பிரம்மாவிடம் இருபத்தையாயிரம் யானைகளின் வலிமையை வரமாகக் கொண்டவன். இந்திரனை வென்று அவன் ஐராவத யானையின் நெற்றிப் பட்டத்தைத் தன் நெற்றிப் பட்டமாகவும், அதன் கொம்புகளில் அலங்கரிக்கப் பெற்று விளங்கிய பூண்களைத் தன் தோள் வளையமாகவும் பூண்டவன். அவன் தான் வெற்றி கொண்ட தேவர்களின் மண்டை ஓடுகளையும், அவர்கள் ஏறி வந்த விமானங்களுடன் கோத்து மாலை போல மார்பில் சூடிக்கொண்டிருக்கிறான். கரியமாலை போன்ற நெடிய தோற்றம் கொண்ட அவ்வரக்கன், கலிகாலம் கரியைப் பூசிக்கொண்டு நடந்து வருகிறதோ என்று கருதும்படி கண்களில் விடத்தையும் தீயையும் கக்கிக் கொண்டு இராமலக்குவனர் பயணமான வழியில் வந்து வழி மறிக்கிறான் என்று வர்ணிக்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

இவ்வாறு தோன்றும் அரக்கனின் கையில் வடவைத் தீ போன்ற இரத்தம் தோய்ந்த திரிசூலம் ஒன்றும் இருக்கிறது. அப்போதே அத்திரிசூலத்தால் அவ்வரக்கன் 'குத்தி கொன்ற பதினாறு யானைகள், முப்பத்திரண்டு சிங்கங்கள், பதினாறு யாளிகள் ஆகியவற்றையும் அவன் இடையில் அணிந்திருக்கும் பாம்புக் கச்சையில் நெருங்கக் கோர்த்துக் கொண்டிருப்பது அவ்வரக்கனின் கோரத் தோற்றத்தை மேலும் கோரப்படுத்திக் காட்டுகிறது. பெரிய குகைக்கு ஒப்பான தன்வாயில் ஒவ்வொரு கவளத்திற்கும் ஒவ்வொரு யானையாகப் போட்டு மென்று கொண்டிருக்கும் அவ்விராக்கதன் பூமி நடுங்க, மலைகள் நடுங்க, மேகங்கள் சூழ்ந்த ஆகாயம் நடுங்க, ஆகாய வீதியில் வலம் வரும் சூரியனும் நடுங்க, கொடிய யமன் போல் நடந்து வருகிறான். அவ்வரக்கன் நடந்து வரும் வேகத்தில் உண்டாகும் காற்றின் விசையால் பெரிய மலைகளும் பெயர்ந்து பஞ்சினைப் போல் பறக்கின்றன.

இவ்வாறு வரும் அரக்கன் மாமிசம் அதக்கியிருக்கும் தன் குகை வாயைத்திறந்து ''யாரடா இங்கே! என் இராச்சியத்திற்குள் அடி எடுத்து வைப்பது? நில்லடா'' என்று அதட்டுவதோடு திருமகளே போன்ற சீதையையும் தன்னொரு நீண்ட கையால் தூக்கிக் கொண்டு விடுகிறான். அரக்கனின் வருகையும் சீதையை அகப்படுத்திக் கொண்ட அவ்வரக்கனின் திடீர்ச் செயலும் இராமலக்குவனரையே நிலைகுலைந்து போகச் செய்கிறது. அவ்வதிர்ச்சியிலிருந்து நொடி நேரத்தில் மீண்டு விடும் அவர்கள் ''ஏ அற்பனே! என்ன செய்தாய் நீ? எங்குச் செல்கிறாய்? நில்'' என்று கூக்குரல் இட்டவாறு அரக்கனைத் தடுக்கிறார்கள். ''நான் யார் தெரியுமா? பிரமதேவனிடம் வரம் பெற்றவன். எனக்கு மரணமே கிடையாது. உங்களைக் கொல்வது எனக்கொன்றும் பெரிய காரியம் அல்ல. இந்த மங்கையை என்னிடம் விட்டுவிட்டு ஓடி உயிர் பிழைத்துக் கொள்ளுங்கள்'' என்று இராமலக்கு



வனரை எச்சரித்துக் சீதையைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறந்துபோக முற்படுகிறான் அரக்கன்.

இராமபிரான் தம் வலியவில்லின் நாணைத் தெறித்து நாணொலி உண்டாக்க, இடியேறு போல உண்டாகும் அதன் பெருமுழக்கம்கேட்டு ஈரேழு பதினான்கு உலகங்களுமே நடுநடுங்கு

கின்றன. விராதனும் அவ்வொலி கேட்டு ஒரு கணம் பதறிப்போய் தான் கையில் எடுத்த சீதையை பூமியிலேயே விட்டு விடுகிறான். ஆனால் மறுகணம் தன் மனநடுக்கம் தீர்ந்து விடும் அரக்கன், தன் திரிசூலத்தைச் சுழற்றி இராமர்மேல் வீசி எறிகிறான். எட்டு திக்கு தேவர்களும், யானைகளும் அஞ்ச வரும் அத்திரிசூலத்தை இராமர் ஒரு பாணம் விட்டு இரு துண்டுகளாக்கி விடுகிறார். அதைக் கண்டு ஆத்திரம் கொள்ளும் அரக்கன், பெரிய பெரிய மலைகளை வேரொடு பறித்து இராமர்மேல் வீசுகிறான். இராமர் தம் பாணங்களால் அம்மலைகளைத் தடுப்பதோடு அவை திரும்பவும் சென்று அரக்கனையே தாக்குமாறு செய்து விடுகிறார். ஆச்சாமரங்களைப் பறித்து இராமர் மேல் வீசுகிறான் அரக்கன். தம் கணைகளால் அம்மரத்தைத் தூள்படுத்தும் இராமர், அரக்கனின் உடல் முழுவதையும் தம் கணைகளால் துளைக்க, அம்புகள் துளைக்கப் பெற்ற அரக்கன் காட்டுமுள்ளம் பன்றி போலவும் காட்சியளிக்கிறான்.

உடலெங்கும் இரத்தவெள்ளம் பீறிட, போரிடவும் சக்தியின்றிச் சோர்ந்து போய் நிற்கும் அரக்கனின் இருதோள்களிலும் இராமலக்குவனர்கள் ஏறிக் கொண்டு விடுகிறார்கள். கூரிய வாள்கொண்டு ஆளுக்கொரு கையாக அரக்கனின் இருகரங்களையும் வெட்டி வீழ்த்தி விடுகிறார்கள். தன்னிருகைகள் அறுபட்டுப் போனதையும், வெட்டுபட்ட இடத்தில் இரத்த வெள்ளம் பெருகுவதையும் உணரும் அரக்கன், இராமலக்குவனர் இருவர் தன் தோளில் நிற்கவே அவர்களுடனே விண்ணில் பறந்து போக முற்படுகிறான். அதைக் காணும் சீதை அலறித் துடிக்கிறாள். ''ஏ அரக்கனே நில் நில்! இராமலக்குவனரை விட்டு விடு. அவர்களுக்குப் பதிலாக என்னை வேண்டுமானால் எடுத்து உண்டு விடு'' என்று சீதை கதற, அரக்கனின் இருதோளையும்கூட அறுத்து எறிந்து, பூமிக்கு தாவிக் குதிக்கிறார்கள் இராம லக்குவனர்கள். தோள்கள் அறுபட்ட அரக்கன் மயங்கிப் பூமியில் சாய்ந்து விடுகிறான். ''பிரமனின் வரம் பெற்ற இவ்வரக்கன் ஆயுதங்களால் சாகா வரம் பெற்றவன் போலும். இவனை மயக்க நிலையிலேயே மண்ணில் ஆழப் புதைத்து விடுவோம்' என்று எண்ணும் இராமர் அவ்வாறே பூமியில் பெரிய பள்ளத்தைத் தோண்டி, அதில் அரக்கனைத் தம் திருவடிகளால் தீண்டித் தள்ளிப் புதைத்து விடுகிறார்.

இராமபிரானுடைய திருவடி தீண்டப் பெற்ற சிறப்பால் அவ்வரக்கனின் முன்னை தீவினைகள் யாவும் அறவே நீங்கிப் போய் விடுகின்றன. பூமியைப் பிளந்து கொண்டு ஒரு திவ்விய வடிவமுடைய கந்தர்வனாக உருமாறி வந்து இராமபிரானின் திருவடிகளைப் போற்றி பணிகின்றான் அவன். ''நான் தும்புரு எனும் கந்தர்வன், குபேரன் ஆட்சி செய்யும் வானகமே என்னுலகம். ஆடல்மகள் அரம்பையிடம் கொண்ட காம மயக்கத்தால் என் தலைவன் குபேரனை வணங்காமல் அலட்சியம் செய்தேன். காமம் கண்ணை மறைத்த என்னை அரக்கன் ஆகுமாறு குபேரன் சபித்துவிட்டான். தங்கள் திருவடி என்னுடலைத் தீண்டும் நாளில் என் சாபமும் நீங்கும் என்று குபேரன் தெரிவித்தான்''.

''நானும் கிலிஞ்சன் எனும் அரக்கனின் மைந்தனாகப் பிறந்து இதுகாறும் மனம் போன போக்கில் எத்தனையோ தீய காரியங்களைச் செய்து உலகப் பழிப்புக்கு ஆளானேன். இன்று என் பழைய நல்வினை காரணமாக உம் பெருமைமிகு திருப்பாதம் என்மேனி தீண்டப் பெற என் சாபமும் தீர்ந்தது, பண்டைய கந்தர்வ மேனியும் நல்லறிவும் பெற்று நான் உய்ந்தேன். ஆதிமூலமே என்று அழைக்க அன்று முதலையால் அலைப்புண்ட யானைக்கு அருள் புரிந்த கருணைக் கடலே! ஆதி முதல் பரம்பொருளே! எல்லா உலகங்களும் உம் ஆணைக்கு அடங்கியனவே! ஆய்ந்தறிய முடியாத அனைத்துச் சமயங்களும் போற்றுவன உம் திருவடிகளையே! தருமத்தின் வடிவமான ஒப்பற்ற பரம்பொருளே! திருப்பாற்கடல் நீங்கி வந்து எனக்கு உம் திவ்விய காட்சியளித்தீர்! வேதங்கள் யாவும் சிறப்பித்துக் கூறும் உம் திருவடிகளால் எனைத் தீண்டி என் முன் பிறவி பாவம் தீர்த்து அருள்புரிந்தீர்! உம் நெருப்பு போன்ற சோதியுடைய திருவடியால் தீண்டப் பெற்று என் தீவினைகள் யாவும் பொசுங்கித் தீர்ந்தன! ஊழிக் காலத்திலும் அழிவிலாத இறைவ! உம்மைப் போற்றிப் புகழ எளியனான யானோ அருகதை உள்ளவன்? அறிவிலாமல் அடியேன் செய்த அபசாரங்களை அன்புடனே பொறுத்தருளி எனை ஆசீர்வதிப்பீராக'' என்று சாபம் தீர்ந்த அத்தும்புரு கந்தருவன், பரம்பொருளான இராமபிரானின் திருவடிகளைப் பணிந்து போற்றுகின்றான்.

(தொடரும்)

## நூல் மதிப்புரை

நூல்பெயர் : காசிவாசி கயிலை மாமுனிவர் மணிவிழா மலர்

நூல்வெளியீடு : ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்

பக்கங்கள் : 250 விலை : ரூ. 61.00

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகளின் மணிவிழா 20-3-91 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பெற்று, மணிவிழா நினைவாக அவர் தம் சீடர்களால் ஒரு மிகச்சிறந்த மலரும் வெளியிடப் பெற்றுள்ளது.

சமயப் பேழை எனப் போற்றத்தக்க இம்மலரில் சமயத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், தமிழறிஞர்கள், நீதிபதிகள், தொழில் அதிபர்கள், பல்துறை வித்தகர்களின் பாராட்டுரைகளும், சுவாமிகளின் சமயப்பணி போற்றும் பல கட்டுரைகளும், சைவசமயப் பெருமையினை மாண்புற விளக்கும் சாத்திரங்கள், தோத்திரங்களின் விளக்கமான கட்டுரைகளும் அற்புதமான வண்ணப்படங்களுடன் மிகப் பொலிவுற வெளியிடப் பட்டுள்ளது. இம்மலர் தமிழ்கூறு நல்லுலகம் கண்டும் கற்றும் களி பேருவகை கொள்ளத்தக்க அற்புத மலராகும்.


சித்திர பாரதம்
கதைவடிவம்: செவ்வேள்
படம் M.N.ராஜா
காமியவனம் வந்துசேரும் பாண்டவர்களைக் காணக் கணக்கிலாத முனிவர்களும், அரசர்களும் வருகிறார்கள்.
இந்திரப்பிரத்தத்திலிருந்து குந்தியும், சுமித்திரையும், அபிமன்யுவும், இளம் பஞ்ச பாண்டவர்களும் செய்தி கேட்டு மனம்பதைபதைத்துக் காமியவனம் வந்து சேருகிறார்கள்.
பாண்டவர் சகாயனான கண்ணபிரானும் காமியவனம் வந்து சேருகிறார். துருபதன், விராடன் முதலான வேந்தர்கள் மனம் கொதிக்கிறார்கள்.
இப்போதே போர்புரிந்து துரியோதனனை வென்று இராச்சியத்தைப் பாண்டவர்களுக்கு ஆக்குவோம்.
அனைவரையும் சாந்தப் படுத்துகிறார் கண்ணபெருமான்.
கோபம் விடுக. வனவாசம், அஞ்ஞாதவாசம் முடிந்த பின் பகைவரை வென்றிடலாம்.
மன்னர்கள் அனைவரும் பாண்டவரிடம் விடைபெறுகிறார்கள். இளம் பஞ்ச பாண்டவர்களை அழைத்துக் கொண்டு துருபதன் புறப்பட, சுமித்திரை அபிமன்யுவுடன் கிருஷ்ணர் துவாரகைக்குப் புறப்படுகிறார். பாண்டவர்களை ஆசீர்வதித்துக் குந்தி, தான் காந்தாரியுடன் இருப்பதாகக் கூறி அத்தினாபுரம் புறப்படுகிறாள்.
முனிவர்கள் காமிய வனத்திலேயே தங்கிவிட, தருமர் அவர்களை விருந்தோம்புவது எவ்வாறு எனச் சிந்தித்து, சூரியபகவானைப் பிரார்த்திக்கிறார்.



தருமரே! இதோ அட்சய பாத்திரம். ஒவ்வொரு நாளும் நீர் வேண்டும் உணவுகள் யாவும் இப்பாத்திரம் வழங்கும். அதிதியரை விருந்தோம்பி, திரௌபதியும் உண்டு பாத்திரத்தைக் கவிழ்த்து விட்டால் அன்றைக்கு மறுமுறை இப்பாத்திரம் பயன்படாது.
அட்சய பாத்திரம் வழங்கி பாண்டவரை ஆசீர்வதித்து மறைகிறார் சூரியபகவான்.
அகில், சந்தன மரங்களின் நறுமணம், ஆனைக்
கூட்டங்களின் நீராட்டம் முதலான இயற்கை எழில் கண்டு, மனக்கவலையின்றி வாழ்கிறார்கள் பாண்டவர்கள்.
பாண்டவர்களைக் காண வியாசமுனிவர் வருகிறார்.
முனிவரை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்து மகிழ்கிறார்கள் பாண்டவர்கள்.
நளமகாராசன் கலியின் கொடுமையால் சூதாடி முன் இராச்சியத்தை இழந்தான் மனைவி, மக்களையும் கூட அவன் பிரிந்து கொடிய துன்பமுற்றான். இறுதியில் கலி நீங்க இழந்த இராச்சியம் அவனுக்கு
மீள கிடைத்தது போல் உங்களுக்கும் அரசு மீளக் கிடைக்கும். வருந்தாதீர்கள்.
உங்கள் கொடிய பகையை வெல்ல நீங்கள் சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெற வேண்டியது அவசியம். அருச்சுனா! தவமேற்கொண்டு கயிலைக்கு நீ இப்போதே புறப்படு.
ஆகட்டும் சுவாமி.

கோடையாண்டவர்

# அருள் அற்புதங்கள்!

எம். வி. அரங்கநாதன்

''கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே'' என்று ஆண்டவனைப் பாடுவார் அருட்பிரகாச வள்ளலார். உலக வாழ்க்கையைக் கொடிய கோடைக்கு ஒப்பிட்டுக் கூறலாம். துன்ப வெம்மை வாட்டாத நாள் ஒன்றும் இங்கு இல்லையல்லவா! ''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்'' என்றல்லவா சான்றோர்கள் பாடி வைத்துள்ளார்கள்! துயரமே மிகுந்த ஞால வாழ்க்கையில் இறைவன் திருவடியை நம்பினோர் இன்பமே மிகப் பெற்று வாழ்வர் என்பதும், வாழ்க்கை என்னும் கோடை வெம்மை நம்மைத் தாக்காமல் இருக்க வேண்டுமானால் நலம் நல்கும் முருகன் திருவடி எனும் குளிர்ப்பூந் தடாகத்தில் நீராட வேண்டும் என்பதும் கண்கூடான உண்மைகள். வாழ்க்கை வெம்மையைத் தணிக்கும் குளிர்ப்பூந்தடாகமாகத் திகழ்வதால்தான் வல்லக்கோட்டை முருகனுக்குக் கோடையாண்டவர் எனும் திருநாமம் காரணப் பெயராக அமைந்து விளங்குகிறது எனறு நான் நம்புகிறேன்.

''கோடை நகர் வாழ வந்த பெருமாளே'' ''கோடைப் பதியோனே'' ''கோடையம்பதி உற்று நிற்கு மயில் வீரா'' ''கோடை எனும் பதி வந்த இந்திரர் பெருமாளே'' ''கோலச் சாலிச் சோலைச் சீலக் கோடை தேவப் பெருமாளே'' என்று அருணகிரிநாத சுவாமிகள் வல்லக்கோட்டை முருகனைப் போற்றிப் பாடியுள்ள ஏழு திருப்புகழ்ப் பாடல்களிலும் ''கோடையாண்டவர்'' எனவே வள்ளிதேவசேனா சமேதராகக் கம்பீரமாக ஏழடி உயரத்திற்கு இங்கு எழுந்தருளியுள்ள முருகரைப் பாடியிருக்கக் காண்கிறோம்.

திருக்கோயிலில் எதிரில் இளநீரேபோல் இனித்திடும் சுவை நீரையுடைய திருக்குளம் எக்காலத்திலும் வற்றிப் போவதே இல்லை. கோடைநகரில் வாழும் கோடையாண்டவர் தம் பக்தர்கட்குச் சுரக்கும் இன்னருளும் எக்காலத்திலும் வற்றுவதே இல்லை என்பதன் அடையாளமோ இது! திருக்கோயிலைச் சுற்றியும், பல மைல்கள் சுற்றளவுக்குப் பரந்து விளங்குவன பச்சைப் பசேல் எனும் நெல்வயல்களே; கோடையிலும் அழகிய நெல் பயிராலும் சோலைகளாலும் சூழ்ந்த வளமையான திருத்தலம், சிறந்த ஒழுக்கமுள்ள உத்தமர்களும் இங்கு அதிகம். மனிதர்களைப் புனிதர்களாகச் செய்யும் புண்ணியத் திருத்தலம் இது என்பதால்தானோ அருணகிரிநாத சுவாமிகள் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே இத்திருத்தலத்தின் வளமை மற்றும் நல்லொழுக்கச் சிறப்பினை இணைத்து

''கோலச் சாலிச் சோலைச் சீலக்
கோடைத் தேவ பெருமாளே''

என்று அற்புதமாகப் பாடியுள்ளார்.

கோடையாண்டவருக்கு ஒவ்வொரு பரணி நாள் அன்றும் இரவு 10 மணி அளவில் முருகன் அடியார்களால் சீரிய பாலாபிசேகமும், சிங்கார விபூதிக் காப்பும் நடைபெறுகிறது. கிருத்திகை நாளன்று ஏழடி முருகனுக்கு எழிலுறச் செய்யப்படும் அபிடேகமும் சந்தனக் காப்பும் காணக் கண்கோடி வேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும்கூட கோடையாண்டவருக்கு அர்ச்சனையும், அலங்காரமும் மிக விசேடமாக நடைபெறுகிறது. பல்லாயிரக் கணக்கான முருகபக்தர்கள் ஞாயிறு வார வழிபாட்டிற்கும், கிருத்திகை மாத வழிபாட்டிற்கும் தவறாமல் வருகை தந்து கலியுக வரதனாம் கோடையாண்டவரின் திருவருள் பெற்றுத் தழைத்து வருகிறார்கள்.

1983 மார்ச் திங்கள் 20-ஆம் நாள். அன்றுதான் முதன் முதலாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான கோடையாண்டவர் ஆலயத்தையும், 500 ஆண்டுகளுக்கு முன்பே அருணகிரிநாதர் பாடிய சிறப்புமிக்க கோடையாண்டவர் பெருமானையும் முதன் முதலாகத் தரிசிக்கும் பேறு பெற்றேன். அன்றையநாளில் ஆலயத்திற்கு விளக்கெரிக்கவும் வசதி இல்லாத நிலையிருந்ததையும், ஆலய அர்ச்சகருக்கு மாத ஊதியம் வழங்கவும் வருமானம் இல்லாத நிலையிருந்ததையும் ஊர்மக்கள் கூறக்கேட்டு உள்ளம் நெகிழ்ந்து போன நிலையில்தான் கோடையாண்டவர் திருவருளால் அவரைத் தரிசிக்கும் பேறு பெற்ற யான், அவன் திருவருளாலேயே அவன் ஆலயத் திருப்பணிகளையும் இயன்றவரை செய்வதென கோடையாண்டவர் முன்னிலையிலே சங்கல்பம் செய்து கொண்டேன். ''முருகா என்னிடம் செல்வம் இல்லை, நீ கொடுத்த செல்வாக்கு இருக்கிறது. எனக்காக அதை நான் இன்று வரை பயன்படுத்தவில்லை. இன்று முதல் உனக்கே எல்லாம் அர்ப்பணிக்கிறேன். பெரிய கோயிலாக இதைப் புனரமைக்க, குறிப்பாக உன் ஆலயத்தில் அணையாமல் விளக்கெரிக்க என் முயற்சிகளுக்குப் பலம் கொடு'' என்று மனதார வேண்டிக் கொண்டேன்.

என் வேண்டுதல் வீண் போகவில்லை. ''நாவிற் சரஸ்வதி நற்றுணையா'' என்று கந்தர் சஷ்டி கவசம் கூறுவதுபோல் என்நாவில் சரஸ்வதி நற்றுணையாக இருந்துகோடையாண்டவர் திருநாமத்தைத் தினமும் ஆயிரம் முறை கூறவும் வல்லக்கோட்டை கோடையாண்டவர் மகிமையை உள்ளம் தித்திக்க தித்திக்க அவன் புகழை அறியாதவர்களிடம் பேசி, அவர்களைக் கோடையாண்டவரை வழிபட வைக்கவும் ஒரு உன்னத பேற்றினை கடந்த எட்டு ஆண்டு களாகப் பெற்று வருகிறேன்.

மாணிக்க வாசக சுவாமிகள் தம் திருவாசகத்தில்

''நினைத்தொறும் காண்தொறும் பேசுந்
தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன்
சொரியும்''

என்று பாடியிருப்பதைப் போலவே வல்லக்கோட்டை கோடையாண்டவரை நினைக்க நினைக்க, காணக்காண, அவன்புகழைப் பேசப் பேச, என் எலும்புகளும்கூட உள்ளே நெகிழ்ந்து போக ஆனந்தத் தேன் சொரிவதை நான் உணருகிறேன்.

''முருகன் திருப்பணிக்கு நாம் இருகரங்களாலும் அள்ளிக் கொடுத்தால் முருகவேள் பன்னிரு கரங்களாலும் நமக்குப் பொன்னும் பொருளும் அள்ளி வழங்குவார்'' என்று பரவசத்துடன் தம் விரிவுரைகளில் சொல்லுவார் திருப்பணிச் சக்கரவர்த்தி டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள். கடந்த 8 ஆண்டுகளில் கோடையாண்டவர் ஆலயத் திருப்பணிக்கு முருகன் அடியார்கள் பலவகைகளிலும் உதவி புரிந்து வருகிறார்கள். அதன் பயனாக அடியார்கள் இல்லம்தோறும் கோடையாண்டவரின் வண்ண திங்கள்காட்டி வீற்றிருக்கவும், இல்லங்கள் மற்றும் வாகனங்களின் முகப்புகள்தோறும் ''வல்லக்கோட்டை முருகன் துணை'' என்ற வாசக ஒட்டிகள் அலங்கரிக்கவும், வல்லக்கோட்டைக்குக் கிருத்திகைதோறும் வந்து வழிபடக் கூடிய அன்பர்கள் பசியாற அன்னதானப்பணி நிறைவாக ஆற்றவும் அருட்பணிகள் இன்று நாளும் நடைபெற்று வருகின்றன. ஆலயமும் கடந்த 8ஆண்டுகளில் புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற விஜயகணபதி சந்நிதியுடனும், தேவிகருமாரி திரிபுரசுந்தரி அம்மன் சந்நிதியுடனும் விரிவு பெற்று வருகிறது. கோடையாண்டவர் சந்நிதிக்கு முன் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வசதியாக வணங்கி வழிபடுவதற்கு அமைக்கப்பட்டுள்ள அழகிய முன்மண்டபமும் கடந்த சில ஆண்டுக் காலத்தில் முருகனடியார்கள் ஆதரவால் செய்து முடிக்கப் பெற்ற திருப்பணியேயாகும்.

பழுதுபட்ட கோயிலையும், திருமதில் சுவர்களையும் முற்றிலும் புனரமைக்கும் திருப்பணி பல லட்ச ரூபாய்கள் செலவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திருப்பணிகளுக்காக உலகப்புகழ்பெற்ற ஸ்தபதிகளில் ஒருவரான திரு முத்தையாஸ்தபதிகளை அணுகித் திருப்பணிகளைச் சிறப்புறத் தொடர்ந்து செய்து வருகிறோம். இவர்களுக்கு உதவியாகத் திருப்பணி வேலைகளில் ஈடுபட்டு வரும் தாம்பரத்தைச் சேர்ந்த ஸ்தபதி திரு குஞ்சிதபாதம் அவர்கள், கோடையாண்டவரின் பக்தர்களில் ஒருவர். இவர் கோடையாண்டவர் பக்தர் ஆன வரலாறு, ஒரு அருள் அற்புதமாகும்.

பல ஆண்டுகளாக மூலவியாதி பீடிக்கப் பட்டு அவஸ்தை பட்டு வந்துள்ள இவர், கோடையாண்டவர் அருள் அற்புத மகிமையை அன்பர்கள் சிலர் கூறக் கேட்டு, வல்லக் கோட்டை வந்து தரிசித்துள்ளார். தொடர்ந்து மூன்று கிருத்திகைகள் வந்து கோடையாண்டவரை வழிபட்டவுடனே இவருக்குக் குணமும் தெரிந்துள்ளது. நோயுற்று அடராமல், நொந்து மனம் வாடாமல் ஆரோக்கியமிக்க சுகவாழ்வு வாழத் திருவருள் புரிபவர் அல்லவா வைத்தியநாதரான கோடையாண்டவர். ஸ்தபதி குஞ்சிதபாதம் அவர்களின் வீட்டிற்குத் தபாலிலும் கோடையாண்டவர் விபூதி பிரசாதம் வந்துள்ளது. விபூதி பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தால் சிறுசிறு குளிகைகளாக விபூதி காட்சியளித்துள்ளது. ''மந்திர மாவது நீறு, வானவர் மேலது நீறு'' என்று திருஞானசம்பந்தர் போற்றிய திருநீற்றினைப் பூசியும், திருநீற்றுக் குளிகைகளை உள்ளுக்குச் சாப்பிட்டும் திரு குஞ்சிதபாதம் அவர்கள் முற்றிலுமாக மூலவியாதி தீர்ந்து இன்று தம் நோய் தீர்ந்து ஆட்கொண்ட கோடையாண்டவர் கோயில் திருப்பணிகளுக்கே தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்.

கோடையாண்டவரின் கோயிலுக்கு வரும் பக்தர்கள் பலரும் தத்தமக்கு ஏற்பட்ட அருள் அனுபவங்களை உள்ளம் பூரிக்க எடுத்து என்னிடம் சொல்லும்போது நான் அடையும் பக்தி பரவசத்தை என்னென்பது! ஸ்தபதி குஞ்சிதபாதம் அவர்கள் தம் உறவினர் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிந்து அவரைப் பார்க்கப் போயிருக்கிறார். அங்குப் போய் அவரைப் பார்க்கும்போதுதான் ''அடடா! வல்லக்கோட்டை கோடையாண்டவர் விபூதிப் பிரசாதம் கொண்டு வராமல் போனோமே! என்ற வருத்தமும் இவரை வாட்டியுள்ளது. ஆனால் என்ன ஆச்சரியம்! கோடையாண்டவர் தெய்வீக சத்திய தர்ம ஸ்தாபனத்தைச் சேர்ந்த அன்பர்கள் வல்லக் கோட்டை முருகன் விபூதி பிரசாதத்தை ஒவ்வொரு படுக்கையிலுள்ள நோயாளிகளுக்கும் வழங்கிக் கொண்டே வந்து, திரு குஞ்சிதபாதம், யாருக்கு தர மறந்து போனோமே என்று வருத்தப்பட்டாரோ அவருடைய உறவினர் படுத்திருந்த படுக்கைக்கும் வந்து வழங்கியுள்ளார்கள். அடியார்கள் எண்ணும் இடத்திற்கு எண்ணியவுடனே வந்து அருள்புரியும் கோடையாண்டவர் அருள் அற்புதம் இது போல எத்தனை எத்தனையோ நித்தம் நித்தமும் நடைபெற்று வருகிறது. வல்லக்கோட்டைக்கு வாருங்கள், வள்ளி மணாளனைப் பாருங்கள். உள்ள கேட்டை அவன் நீக்கிடுவான், உயர்ந்த வீட்டை அவன் ஆக்கிடுவான்.

# ஆடல் காணீரோ... திருவிளையாடல் காணீரோ...



**கம்பன் கவி நயமணி வே. தியாகராஜன் (9)**

உக்கிரபாண்டியன் மதுரையை ஆண்டு வருங்காலத்து மாதம் மும்மாரி பொழிய, வேள்விகள் நன்கு நடைபெற்றன. தொண்ணூற்றாறு அசுவமேத யாகங்களைச் செய்தான். நூறு யாகங்கள் செய்தால் தேவேந்திரப் பதவி கிடைத்துவிடும். ஆதலால், உக்கிர பாண்டியனைக் கண்டு தேவேந்திரன் பொறாமை கொண்டான். கடலுக்கு அதிபதியான தெய்வத்தை அழைத்து ''மதுரையை அழித்துவா'' என ஏவினான். ஒரு நாள் இரவில் வருணன் விளைவை அறியாது, மதுரையை அழிக்கப் பொங்கி வந்தான். தூங்கிக்கொண்டிருந்த பாண்டியன் கனவில், சோமசுந்தர நாயகர் சித்தர் வேடத்துடன் எழுந்தருளி, ''பாண்டிய! மதுரையை அழிக்கக் கடல் பொங்கி வருகின்றது. நான் கொடுத்த வேலாயுதத்தை எறிந்து கடலினை வெற்றிக்கொள்'' எனக் கூற பாண்டியன் கைதொழுது, இறைவனை நாவினால் துதித்துக்கொண்டே எழுந்தான்.

''வழுதி உந்தன் நகரழிக்க வருவது ஆழி
வல்லைநீ
எழுதிபோதி! வென்றிவேலெறிந்து வாகை
பெறுகெனத்
தொழுது செங்கரத்தினான் துதிக்கு நாவினான்
எழீஇக்
கழுதுறங்கு கங்குலிற் கனா வுணர்ந்து காவலன்''

எழுந்த பாண்டியன் தன் மந்திரிகளுடன் கடற்கரை ஓரம் வந்து, பொங்கி எழும் கடல் கண்டு ஆச்சரியமடைந்து, என்ன செய்வதென்றறியாமல் நிற்க, கனவில் வந்த சித்தர் எதிரிலேயே தோன்றி ''பாண்டியா! ஏன் பிரமித்து நிற்கின்றாய்? வேலை ஏவி வெற்றிபெறுக'' என்றார். பாண்டியன் திடீரென்று உணர்ச்சி வரப்பெற்று வேலை எடுத்து வீச அவ்வேல், சுர்ரென்ற ஓசையுடன் சென்று கடல் நீரை உறிஞ்சியது. கடல் அரசனின் கணைக்கால் அளவு குறைந்து நின்றது. இதனால் உக்கிர பாண்டியனுக்கு

'வேலை அடிவலம்ப நின்றான்' எனப் பெயர் வந்தது.

சூரபத்மனுக்கு இடங்கொடுத்ததால் முருகனால் தண்டிக்கப்பட்டும், விருத்திராசுரனுக்கு இடங்கொடுத்ததால் அகத்தியர் ஆசமனம் செய்தும் வலி குறைந்தகடல் இன்றைக்கு பாண்டியன் வேலால் அடக்கப்பட்டது. இந்த சமுத்திரம் வலியிழப்பது என்றுமுள்ளது போலும் என்கிறார் கவிஞர்.


''சந்த வேத வேள்வியைத் தடுப்பதன்றி;
உலகெலாம்
சிந்த வேறு சூழ்ச்சி செய்து தேவர் கோவின்
ஏவலால்
வந்த வேலைவலியழிந்த வஞ்சகர்க்கு நன்றி
செய்து
இந்த வேலை வலியிழப்ப தென்றுமுள்ளதே
கொலாம்!''

உக்கிரகுமாரனுக்குச் சிவபெருமான் காட்சி தந்தார். மட்டிலா மகிழ்ச்சி கொண்ட பாண்டியன் நாட்டை அவருடையது என எண்ணி அன்பு பூண்டு ஒழுகி அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

உக்கிரகுமார பாண்டியன் அவ்வாறு ஆட்சி செய்து வரும் காலத்து, கோள்கள் (கிரகங்கள்) நிலை காரணமாக தமிழ் நாடாகிய சேர, சோழ, பாண்டியர் மூவர்களது நாடும் மழையின்மை காரணமாக வரண்டது. அது கண்டு வருந்திய மூவேந்தர்களும் பொதிய மலையை அடைந்து அகத்தியரிடம் முறையிட்டனர். ''செவ்வாய்க்கு முன் சூரியன் செல்ல, சுக்கிரன் இவர்களுக்குப் பின் செல்ல, பன்னிரண்டு வருடங்கள் மழை கிடையாது எனச் சோதிட நூல் கூறுகின்றது.''

''காய்சின வெய்யோன் சேயோன் முன்செலக்
கதிர்கால் வெள்ளி
தேசிகன் பின்பு சென்று நடக்கும் இச் செயலால்
முந்நீர்த்
தூசின உலகில் பன்னீராண்டுவான் சுருங்கு
மென்று
பேசின நூல்கள் மாரி பெய்விப்போற் சென்று
கேண்மின்''

(உலகில் சோதிடம் பொய் என்பது ஒருசாரரர் கூற்று, சோதிடம் கூறுவோர் சிலர் கவனமின்றி கூறும் பலன்கள் பலியாதிருக்கலாம். ஆனால் சாத்திரம் பொய்யாகாது. அமாவாசை, பௌர்ணமி, கிரகணம் பிடித்தல், இவைகளை சரியான நிமிடக் கணக்கில் கூறுகின்றனர். பொய்யாயிருந்தால் சொல்ல வருமா?.) ''ஆதலால் மழை உண்டாக்கும் தேவதையான தேவேந்திரனிடம் போய்க் கேளுங்கள்'' என்றார் அகத்தியர். தேவருலகம் செல்வதற்கு சோம வார விரதம் இருக்க வேண்டும் என்ற விவரங்களையும் கூறலானார். ''தேவர்களில்



சிவபெருமானும், சக்திகளில் ருத்ராணியும் சிறந்தவர். அதுபோல் விரதங்களில் சிறந்தது சோமவார விரதம், மற்ற ஊர்களில் இருந்து சோமவார விரதம் இருப்பதைக் காட்டிலும் மதுரையில் நோற்பது கோடிபங்கு அதிக பலன் தரும். காலையில் எழுந்து நீராடி இறைவனை தியானித்து விநாயகப் பெருமானைப் பூசிக்க வேணும். பிறகு சிவபெருமானுக்கு நல்ல பட்டாடையுடுத்தி, உபசாரபூசை பூராவும் செய்ய வேணும். வில்வ பூசை மிக விசேடம். வில்வம் சிவபெருமானது, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்ற மூன்று சக்திகளின் வடிவமாகும். 'ஆகையால் வில்வ மரத்தடியில் ஊண் உறக்க மின்றி அரகர என சிவஜபம் செய்தால் சகல பாவங்களும் நீங்கும். இலை மடங்கினும், சுருங்கல், வாடி உலர்ந்தது, மயிர்ச்சிக்குண்டது புழுக்கடிபோன்ற குற்றங்களிலிருந்தாலும் சுத்தம் செய்து பூசை செய்யலாம். அவ்வளவு விசேடமானது வில்வம்.

''மடங்கிதழ் சுருங்கல்; வாடியுலர்ந்தது;
மயிர் சிக்குண்டல்;
முடங்கு காற்சிலம்பிக்கூடு; புழுக்கடி; முதலாம்
குற்றம்
அடங்கினும் குற்றமில்லை; உத்தமமாகும்
வில்வம;
தடங்கை கொண்டு ஈசன் நாமம் ஆயிரம்
சாற்றிச்சாற்றல்''

''நான் செய்யும் குற்றங்கள் தினமும் பலபலவாகும். அமரரை அழிக்க வந்த ஆலகால விடத்தை யுண்ட பெருமானே! எம் குற்றங்களைப் பொறுத்துக் காக்க வேணும்'' என வேண்டி அருளுவர்,

'அடியேன் செய்யுங் குற்றம் அன்றைக்கு
அன்று அனந்தமாகும்
கொடிய நஞ்சு அமுதாய்க் கொண்டாய்!
குற்றமும் குணமாய் கொள்வாய்
படியமுதரிய நங்கை பங்கனே! காத்தியென்று
முடியுற அடியில் வீழ்ந்து மும்முறை வலஞ்
செய்து ஏத்தி.''

இந்த இடத்தில் சோமவார விரதம் அனுட்டிக்கும் பலவகைகள் சொல்லப்படுகின்றன. மூவேந்தரும் பொற்றாமரையில் நீராடி, சோமவார விரதம் கொண்டனர். ஆகாய மார்க்கமாகத் தேவலோகம் சென்றனர். தேவராசன், தன்னுடைய ஆசனத்திற்கும் தாழ்ந்த மூன்று ஆசனங்களை இட்டான். உக்கிரபாண்டியன் திடீரென்று தேவேந்திரன் ஆசனத்தில் ஏறி, அவனுக்குச் சமமாக அமர்ந்தான். இது கண்டு பொறாமையும் கோபமும் கொண்ட தேவேந்திரன் மற்ற இருவரையும் வந்தகாரியம் என்னவென்று கேட்க, மழைவேண்டி வந்ததாக அவர்கள்கூற, அவர்களுக்கு வரமளித்து உபசரித்துத் திருப்பி அனுப்பினான். தனக்குச் சமமாக அமர்ந்து தன்னிடம் மழை வேண்டாதிருக்கும் உக்கிரகுமார பாண்டியனுக்கு



# அறுபத்துமூவர் பலவகைத்தொண்டர்

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

**யில் தொண்டு செய்தவர்-6 பேர்**

மூர்த்தி நாயனார் -சந்தனக்காப்பு

. நமிநந்தி அடிகள் -விளக்கெரிப்பு

கூற்றுவ நாயனார் -பூசைகள் நடத்தினவர்.

ணம்புல்லநாயனார்- விளக்கெரிப்பு

ருகநாயனார் -பூமாலை கட்டியவர்

ருநாளைப்போ நாயனார் -தோலும், வாரும், நரம்பும், கோரோசனையும் கொடுத்துவந்தவர், நந்தியை விலகச்செய்தவர், தீ மூழ்கியவர்.

**டிப்பதம் பெற்றவர்-3 பேர்**

நீலகண்டயாழ்ப்பாணர்-யாழ்வாசித்துப் பாடினார்; மதுரைக் கோவிலுள் சிவனார் கட்டளைப்படி நுழைந்தவர்.

2. ஆனாயநாயனார் -குழல்வாசித்து முத்தி பெற்றவர்; பஞ்சாட்சரத்தைக் குழலில் வாசித்தவர், சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்.

**மனக்கோயில் கட்டியவர்-2 பேர்**

1. பூசலார் நாயனார்:-மனத்தால் கோயில் கட்டியவர்.

2. வாயிலார் நாயனார்-மனக்கோயிலில் வழிபட்டவர்.

**மந்திரம் செபித்த அடியார்கள்-4 பேர்**

1. உருத்திரபசுபதியார்-கழுத்தளவு நீரில் நின்று உருத்திர மந்திரம் செபித்தவர்.

2. சிறப்புலி நாயனார்-பஞ்சாட்சரம் ஓதினவர்; யாகம் செய்தவர்.

3. சோமாசிமாறர் -பஞ்சாட்சரம் ஓதினவர்; சிவனடியாரை ஆதரித்தவர்.

4. திருமூலர்- திருமந்திரம் பாடியவர்.

**அடியார்க்குத் தொண்டு செய்தவர் 10 பேர்**

1. அப்பூதி அடிகள் -அப்பரை வழிபட்டவர்.
2. கணநாதநாயனார்-சம்பந்தரை வழிபட்டவர்
3. புகழ்த்துணைநாயனார்-பொற்காசு பெற்றுத் தொண்டு செய்தவர்.

4. இடங்கழி நாயனார்-நெல்தந்து அடியார்க்கு உதவியவர்.

5.நேசநாயனார் -அடியார்க்கு ஆடை நெய்து தந்தவர்.

6.நரசிங்கமுனையரையர்-அடியார்க்கு அன்ன மிட்டவர்.

7.பெருமிழலைக் குறும்பர்-அடியார்க்கு அன்ன மிட்டவர்; சுந்தரரையே வழிபட்டவர்; அவர்க்கு முன் கயிலை சென்றவர்.

8.சடையனார் -சிறந்த அடியவர்.

9.இசைஞானியார் -சிறந்த அடியவர்.

10.கூற்றுவ நாயனார்-சிறந்த அடியவர்.

**சமணரோடு போரிட்டவர்-7 பேர்**

1.மூர்த்திநாயனார்-எலும்பும் தேயச் சந்தனம் அரைத்தவர்; சந்தனக் காப்பு; சமணர் துன்பம்; வட அரசன் தடை; அவன் இறக்க இவர் அரசர்ஆனார். இவரால் சைவம்பரவியது.

2.நமிநந்திஅடிகள்:-சமணர் நீரால் விளக்கெரி என்றதும் அங்ஙனமே செய்து, சமணர் வாயை அடக்கியவர்.

3.தண்டிஅடிகள் - குளம்வெட்ட முயற்சி; (கண் இல்லாதவர்) சமணர் பரிகசிப்பு, கண் பெற்று சமணரைத் திருவாரூரில் இருந்து விரட்டியவர்.

4.அப்பர்: சமணராலும். மகேந்திர வர்மனாலும் பல துன்பங் கட்கு ஆளானவர்.

5. சம்பந்தர்- சமணரைவாதிட்டுத் தோற்கடித்தவர்.

6.மங்கையர்க்கரசியார்: சம்பந்தருக்கு உதவி செய்தவர்.

7.குலச்சிறைநாயனார்-சம்பந்தருக்கு உதவி செய்தவர்.

**கோயில் கட்டிய அடியார்கள்-2 பேர்**

1.கோச்செங்கட்சோழர்-பல கோவில்களைக் கட்டியவர்; சிதம்பரம் கோவிலைக் கட்டியவர். தீட்சிதரை வரவழைத்து மாளிகை கட்டித் தந்தவர்.

2.காரிநாயனார்: -மூவேந்தர் மீது கோவை பாடிப் பணம் பெற்றுக் கோயில்கள் கட்டினார்.

**தலங்களைத் தரிசித்தவரும் பாடினவரும்-9 பேர்**

1.காரைக்கால்அம்மையார்-சிவனைப் பாடிக் கயிலாயம் சென்றவர்; பாடினவர்.

2.ஐயடிகள் காடவர்கோன்-பலதளிகள் தரிசித்து வெண்பாக்களை பாடினார். தமிழிலும் வடமொழியிலும் வல்லவர்; மகனுக்கு முடிசூட்டித் தலயாத்திரை செய்தவர்.

3.கழற்சிங்க நாயனார்-பல தளிகளில் தொண்டு செய்தவர், மனைவியார் கையை வெட்டியவர்.

4.அப்பர்-பலதலங்களைத் தரிசித்து திருமுறைகள் பாடினார்.

5.சம்பந்தர்- ,,

6.யாழ்ப்பாணர்- ,,

7. சுந்தரர்:- ,,

8.சேரமான் பெருமான் நாயனார்:- ,,

9.விறல் மிண்டர்- பல தலங்கள் தரிசித்து அடியாருடன் இருந்தார்; திருத்தொண்டத் தொகை பாடத்தூண்டியவர்.

**சிவவேடத்திற்கு மதிப்பீந்து இறந்தவர்-2 பேர்**

1.மெய்ப்பொருள்நாயனார்:பகைவன் முத்தநாதன் அடியாராகவந்து குத்திக் கொன்றான்.

2.ஏனாதி நாயனார்-பகைவன் அதிசூரன் விபூதி அணிந்து வந்து கொன்றான்.

**செயற்கரிய செய்தவர்-11 பேர்**

1.கண்ணப்பநாயனார்:கண்ணிடந்துஅப்பினவர்

2.புகழ்ச்சோழநாயனார்: பகைவர் தலைகளுள் ஒன்று அடியார் தலை என கண்டதும் தீயில் வீழ்ந்து இறந்தார்.

3.சிறுத்தொண்டநாயனார்:மகனை அறுத்து அமுதுபடைத்தவர்.

4.குங்குலியக்கலயநாயனார்:தாலி விற்றுக் குங்குலியம் வாங்கியவர்; சாய்ந்த லிங்கத்தை நிமிர்த்தியவர்.

5. திருநீலநக்கநாயனார்: லிங்கத்தின் மீது விழுந்த சிலந்தியை அப்புறப்படுத்திய மனைவி ஆசூயை செய்தனள் என்று அவளைத் துறந்துபின் கடவுள் கூற அவளைஏற்றார். சம்பந்தரோடு சோதியிற் கலந்தவர்.

6. கலியநாயனார்: திருவிளக்குப் பணி செய்தவர்; மனைவியை விற்க முனைந்தார். உதிரத்தால் விளக்கு எரித்தனர்.

7. சண்டேசநாயனார்-மணலைப் பிடித்து லிங்கமாக வழிபட்டவர். சிவ பூசைக்கு இடையூறான தந்தைகாலை வெட்டியவர்.

8. கழற்சிங்கநாயனார்: திருவாரூரில் தம்மனைவி பூ மோந்ததால் செருத்துணை நாயனார் மூக்கரிய, இவர் அவள் கையை வெட்டினார்.

9. அரிவாட்டயர்: பிரசாதம் சிந்திப் போகக் கழுத்தை அரிய முயன்றவர். அவர் கையைச் சிவனார் பற்றிக் கொண்டார்.

10. கலிகம்ப நாயனார்-வேலையாளின் பாதம் துலக்க நீர்விடத் தாமதித்த மனைவியின் கையை வெட்டியவர்.

11. கோட்புலி நாயனார்: சிவநெல்லைத் தின்றதற்காக உறவினரைக் கொன்றவர். வாளொடு கயிலை சென்றவர்.

**சிவனால் சோதிக்கப்பெற்றவர்-8 பேர்**

1. இயற்பகைநாயனார்: மனைவியை அடியவருடன் அனுப்பியவர், தடுத்த உறவினரைக் கொன்றவர்.

2. திருநீலகண்டநாயனார்: திருவோட்டுச் சண்டை; மனைவியையும் இவரையும் சிவனார் கூட்டுவித்தார்.

3 இளையான்குடிமாறநாயனார்: விதைத்ததைக் குற்றிவிட்டு உத்திரம் முதலியன கொண்டு சமைத்தவர்.

4. அமர்நீதிநாயனார்-கோவணச்சண்டை; தராசில் அவர், மனைவி, மகன் ஏறிநின்றனர்.

5. திருக்குறிப்புத் தொண்டர்-அடியார் தந்த ஆடையை மழையால் மாலையில் உணர்த்திக் கொணரக் கூடாமையின் உயிரைமாய்க்க முயன்றவர்; சிவனார் அவரைப் பிடித்துக் காப்பாற்றினார்.

6. அதிபத்தநாயனார்-முதல் மீன் சிவனுக்கென விட்டவர்; மீனே கிடைக்காமல் ஒரு பொன் மீனே முதலில் கிடைக்க அதையும் சிவனுக்கு விட்டவர்.

7. மானக்கஞ்சாறர்- ஏயர்கோன் மாமனார்; ஒரேமகள் கூந்தலை அடியவர்க்கு அறுத்துக்கொடுத்தவர்.

8. ஏயர்கோன் கலிக்காமநாயனார்.-சூலை நோயால் வருந்தினார். சுந்தரைக் காண மறுத்து தற்கொலை செய்து கொள்ள முயன்றவர்; இறுதியில் சுந்தரால் நோய் நீங்கப்பெற்று இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர்.

**அழுத்தமான சைவப்பற்றுடையவர்-6 பேர்**

1. எறிபத்தநாயனார்-புகழ்ச் சோழரின் யானை மாலையை அறுக்க, அதனைக் கொன்றவர். பாகர் முதலியவரையும் கொன்றவர்.

2. சத்திநாயனார்-சிவனடியாரை இகழ்பவரின் நாவை அறுத்தவர்.

3. மூர்க்கநாயனார்-சூதாடிப் பெற்ற பொருளைச் சிவனடியார்க்கு அமுதளிக்க உதவினார்; சூதாட்டத்தில் தவறான ஆட்டம் ஆடுபவரைக் குத்துபவர்; மூர்க்கர்.

4. சாக்கியநாயனார்: புத்தர்-காஞ்சி சென்று பல மதங்களைச் சோதித்துச் சைவராகிக் கல்லால் அர்ச்சித்து முத்தி பெற்றவர்.

5. நந்தனார்-நந்திவிலகச் செய்தவர்; சிதம்பரத்தைத் தரிசித்தவர்.

6. முனையடுவார்நாயனார்: போர்செய்து வந்த பணத்தைக் கொண்டு சிவன் அடியார்க்கு உணவு படைத்தவர்.

**(நாயன்மார்களின் அருமை பெருமைகளை அவனியறிய இவ்வாறு வகைப்படுத்திக் காட்டுகிறார் டாக்டர் மா. இராசமாணிக்கனார். ஒரு பிரிவில் இடம் பெறும் நாயனார், சிறப்பு காரணமாக பிற பிரிவிலும் இடம் பெறுகிறார்.)**

# சூடிக்கொடுத்த சுடர்க்கொடி



**கவிஞர் நெல்லை ஆ. கணபதி**

(நேரிசை வெண்பாக்கள்)

நந்த வனத்துளசி நங்கை! திருப்பாவை
தந்த திருக்கோதை! தம்வழியில்-சந்ததமும்
மார்கழிநன் நீராடும் மங்கையர்கட் கெல்லாமே
வாரானோ தையில் வரன்!

அண்ணல் திருவரங்கன்! ஆண்ட பெருமாள்தம்
எண்ணம் நினைவெல்லாம் ஏந்தியவள்! கண்ண
னவன்
மீதில் பெருங்காதல் மேலோங்க ஊனுருக
ஓதினாள் பாவை உவந்து!

காலைப் பனியில் கடுங்குளிரில் கன்னிதிரு
மாலைத் துதித்தாள்! மனம்குளிர்ந்தாள்!-
சோலைத்
துளசித் திருமாலைச் சூடிக் கொடுத்தாள்!
உள சித்தம் தாமே உவந்து!

தன்வயதுத் தோழியர்கள் தாமும் மணம்புரிய
அன்னமயில் நாளும் அதிகாலை-கன்னியரைப்
பாடி அழைத்தாள்! பாவை மலர்தொடுத்தாள்!
ஆடிக் களித்தாள் அகம்!

காதல் மணாளன் கரம்பற்றப் பாடியவள்!
கூதல் பனியின் குளிர்மறந்தாள்!-மாதவள்தான
மாதவனை நாடி மனம்குளிர்ந்தாள்! காலை
ஆதவன்முன் தாமரை போல் ஆம்! [எழும்

பக்தி பெருகப் பரமன் அருள்பெறுக
முத்தி தனைநாடி மூழ்கியவள் சக்திமிகும்
மீரா பஜனையென மேவும் திருப்பாவை
சீராய்த் தொடுத்தாள் தினம்!

கண்ட கனவெலாம் கைகூட நோன்பிருந்த
பெண்டிர் குலத்தின் பெருவிளக்கு! -
அண்டமெலாம்
போற்றப் பரந்தாமன் புண்ணியத்தால் மாலை
சாற்றினாள் நெஞ்சம் தழைத்து! [யினைச்

ஆழ்வார் குலக்கொழுந்தாம் ஆண்டாள்
தொடுத்தமலர்
தாழ்வாய் மதுசூதன் தாள்வரையில்-
சூழ்ந்திடினும்
பாவை நெடுங்கூந்தல் பார்த்தோர் பரிதவித்
கோவைப் பழக்கண்கள் கொண்டு! [தார்

அரங்கா! அபசாரம்! அறியாத பேதைக்
கிரங்காய் மனம் என்றே கேட்டு உறங்காத
கண்களுடன் ஆழ்வார்கள் கைகூப்பித் தாம்
தொழுதார்!
பண்கமழப் பாடிநின்றார் பாட்டு!

எல்லாமே யாம் அறிவோம்! அம்மீதில் காதலது
அல்லாமல் வேறொன் றறியாப் பெண்!
பல்லாண்டு
வாழ்வாள்! வளம்பெறுவாள்! வையத்தில் ஓங்கு
சூழ்வாள்! இனி எம் துணை! [புகழ்

என்றான் நவநீதன்! இளம்பெண்டீர் நோன்
பிருந்து
நன்றாகப் பாவை நவின்றுவரில் -மன்றிலினில்
மத்தளம் கொட்டும்! வரிசங்கம் நின்றூதும்!
கைத்தலம் பற்றும் கனா!



# மாலவன் செய்த மச்சாவதாரம்

—ஜெயஸ்ரீ மூகாம்பிகை —

அவதாரம் என்றால் தன்னிலையிலிருந்து இறங்கி வருவது என்று பொருள். மும்மூர்த்திகளில் பிரம்மதேவர் அவதாரம் செய்ததாக இல்லை. சிவபிரானும் தன் முழு அம்சத்தோடு அவதாரம் நிகழ்த்தியதாக இல்லை. ஆனால் திருமால், திரும்பத் திரும்ப அவதாரம் செய்கிறார். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருமான் தன்னிலை இறங்கி தாய்வயிற்றில் பிறந்து, தக்கதும், தகாததும் காட்டி, தன் செயல்கள் பலமுறைத் தான் படைத்த மானிடர்களாலும் விமர்சனம் செய்யப்படும் நிலைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்கிறார், என்றால் அதற்குக் காரணம் இவர் காக்கும் கடவுள். பிரம்மதேவர் சிருஷ்டித்த ஜீவன்களைக் காக்கும் கடமையைத்தான் ஏற்றிருப்பவர்.

காக்கட்டும்! காப்பதற்காக அவர் பூமிக்கு வந்துதான் ஆகவேண்டுமா?

ஒருவன் கடலில் விழுந்து விடுகிறான். அவனைக் காக்க வேண்டுமென்றால், கரையேற்ற வேண்டுமென்றால், கரையில் இருப்பவனும் அந்தக் கடலில் குதித்துத்தான் ஆக வேண்டும். மோகக்கடலில், மூழ்கித் தத்தளித்துக் கொண்டுருக்கின்ற மானிடர்களைக் காப்பாற்ற அவரும் இந்த சாகரத்தில் வந்து விழுகிறார். அப்படிக் கரையேற்றுவதால்தான் அவர் கடவுள். கரையேற நீச்சல் தெரிய வேண்டும். சிலருக்கு நீச்சலைக் கற்றுத் தருகிறார். அது போதாது என்ற நிலையில் தாமே நீந்திக் காட்டுகிறார். இது செய்முறை, ப்ராக்டிகல் என்று கூறுகிறோமே அந்நிலையானது. அதுவும் முடியாது மூச்சுத் திணறி மூழ்கிக் கொண்டிருப்பவர்களைத் தானே கரம் பற்றிக் கரை சேர்க்கிறார். இம்மூன்று நிலைகளிலும், தன் காக்கும் கடமையை நிறைவேற்றத்தான் மற்ற இரு மூர்த்திகளும் நிகழ்த்தாத அவதாரங்களைத் தான் நிகழ்த்தினார்.

''எவ்வெப்போது தர்மத்திற்கு அழிவும், அதர்மத்திற்கு விருத்தியும் ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் என்னை நானே சிருஷ்டி செய்து கொள்கிறேன். சாதுக்களைக் காக்கும் பொருட்டும், பாவிகளை அழிக்கும் பொருட்டும் தர்மத்தை நன்கு நிலைநாட்டும் பொருட்டும் யுகங்கள் தோறும் நான் அவதாரம் செய்கிறேன்.''

என்று கீதையில் பகவானே கூறியுள்ளார்.

''அறந்தலை நிறுத்தி வேதமருள்
சுரந்தறைந்தநீதித்
திறந்தெரிந்துலகம் பூணச் செந்நெறி
செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் துடைத்தேகவிண்டு
பிறந்தனன் பொற்பாதமேத்துவார்
'பிறப்பறுப்பான்''

(சுந்தரகாண்டம், பிணிவீட்டுப் படலம்)

'தர்மத்தையே தலையானதாகக் கொண்டு, வேதம் கூறும் நெறியை உலகத்தார் அறிந்து அவ்வழி அனுசரிக்க, தீயோர் அழிய, நல்லோர் துன்பம் நீக்கத் தோன்றினான். அவன் பொற்பாதம் போற்றுபவர்களின் பிறவிப்பிணி நீங்கும்.''

—இது கம்பர் வாக்கு.

தர்மத்தை நிலைநாட்ட, வேதங்களைக் காப்பாற்ற, தீயவர்களை அழிக்க, நல்லவர்களைக் காப்பாற்ற, தர்மத்தை எடுத்துக்கூற, தர்மத்தை நடத்திக் காட்ட ஸ்ரீமந்நாராயணர் பல திருவவதாரங்களை நிகழ்த்தினார். அவற்றில் முக்கியமானவை பத்து. இதையே தசாவதாரம் என்று கூறுகிறோம்.

''தேவுடைய மீனமாயாமையா
யேனமாயரியாய்க் குறளாய்
மூவுருவிராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய்
முடிப்பான் கோவில்
சேவலொடுபெடையன்னஞ் செங்கமல
மலரேறி யூசலாடிப்
பூவனைமேற்றுதைந்தெழு செம்பொடியாடி
விளையாடும் புனலரங்கமே''

''மீனாமைகோலநெடு நரசிங்கமாகி
நிலம் விரகாலளந்த குறளாய்
ஆனாது சீறு மழு வில்லும் வெல்லு
முளைபலமுற்ற செங்கையவராய்
வானாடர் வந்து தொழ, மண்ணாடர்
யாவரையும் வாழ்விக்க வந்த வடிவாய்
நானாவிதங் கொள் பரியாளாகி நின்ற
ருளும் நாராயணாய நமவே''

இவ்விரு பாசுரங்களும் பரமனுடைய பத்து அவதாரங்களையும் பட்டியலிடுகின்றன.

1. வேதங்களைக் காக்க மச்சாவதாரம்
2. தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்க கூர்மாவதாரம்
3. அகிலத்தை காக்க வராக அவதாரம்
4. அன்பனை காக்க நரசிம்மாவதாரம்
5. அசுரனுக்கும் அருள் புரிய வாமன அவதாரம்.
6. தர்மத்தில் உள்நுட்பம் இருப்பதை வெளிப்படுத்த பரசுராம அவதாரம்
7. தர்மத்தை நடத்திக்காட்ட ஸ்ரீராமவதாரம்.
8. தர்மத்திற்குத் துணைநிற்க பலராம அவதாரம்
9. தர்மத்தை எடுத்துக்கூற ஸ்ரீகிருஷ்ணாவதாரம்
10. அதர்மத்தை அழிக்க கல்கி அவதாரம்.

முதல் அவதாரமான மச்சாவதாரத்தை ஆறாவது மன்வந்திரத்தின் முடிவில் செய்தார். ஆயிரம் சதுர்யுகங்கள் சேர்ந்தது ஒரு மன்வந்திரம். மன்வந்திரத்தின் முடிவில், இடைக்காலப் பிரளயம் ஏற்படும். அப்போதுதான் பிரம்ம தேவருக்கு இரவுப்பொழுது. தம் சிருஷ்டித் தொழிலை, நிறுத்திவிட்டுக் களைத்து உறங்குவார். அவ்வாறாக ஆறாவதான மன்வந்திரத்தின் முடிவில் பிரம்மதேவர் உறங்கிவிட்ட சமயம்.

இரவின் இருட்டில்தானே, உணர்வும் உறங்கும் போதில்தானே, திருட்டுநடைபெறும். படைத்தவனிடமிருந்தே பறிக்க ஒரு திருடன் வந்தான். அவன் ஹயக்ரீவன் என்ற பெயர் கொண்ட அசுரன். உறங்கும் பிரம்மதேவரிடமிருந்து வேதங்களை அபகரித்துச் சென்றுவிட்டான். இதன் பொருள் வேதங்களை எழுதிய ஓலைச்சுவடிகளை திருடிச் சென்றான் என்பதல்ல. வேத அதிஷ்டான தேவதைகளைத் தன் வசமாக்கிக் கொண்டுவிட்டான் என்பதே.

யாகங்களை, மந்திரங்களை, தர்மங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது வேதம். வேதத்தினால்தான் இவ்வுலக மக்களும் மேலுலக மக்களும், வாழ்கின்றனர்.

''ஆதியில் திலீப மன்னன் ஆட்சி செய்யும் போது, பூமியில் யாகயக்ஞங்கள் மிகுதியாக நடைபெற்றன. வேதநெறி தழைத்து இருந்தது. யாக வேதியில் சொரியப்படும் ஹவிசான தங்கள் உணவைப் பெற்று தேவர்கள் பலமாக விளங்கினார்கள். அதனால் மகிழ்ந்து தேவேந்திரர் பூமியில் வளமாக மழை பொழியச் செய்தார். அதனால் தானியங்கள் செழித்து விளங்க மக்கள் பலமாக விளங்கினார்கள். தேவர்களும் மனிதர்களும் ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொண்டு இருசாராருமே நிறைவாக வாழ்ந்தார்கள்.''

இவ்வாறு காளிதாசர் திலீப மன்னரின் ஆட்சியை வர்ணிக்கிறார்.

யாகம் முதலான பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே பொதித்து வைத்திருப்பதே வேதம். வேதம் இல்லையென்றால் தேவர்களும் இல்லை. மனிதர்களும் இல்லை. தர்மத்தின் பகை அதர்மம். தேவ இனத்தின் பகை அசுர இனம். ஹயக்ரீவன் என்கின்ற இந்த அசுரன் பலசாலி, புத்திசாலி, தேவர்களை வெல்ல வேண்டுமென்றால், அவர்களோடு யுத்தம் செய்வது ஒன்று மாத்திரமே வழியல்ல; அவர்கள் பலத்தையளிக்கும் வேதங்களை அபகரித்துக் கொண்டாலே தேவர்கள் தன்னால் நசித்துப் போவார்கள் என்று கணக்கிட்டான். பிரம்மதேவர் உறங்கும்போது வேதங்களை அபகரித்துக் கொண்டு சமுத்திரத்தினுள் சென்று மறைந்து கொண்டான்.





தன்னுடைய சொரூபமேயான வேதங்களைக் காப்பதற்காகவும் அவற்றை அபகரித்த அசுரனை அழிப்பதற்காகவும், அவ்வேதம் விளக்கும் பரப்பிரம்ம ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்காகவும், தன்னை அண்டினவர்க்கு அழிவில்லை என்பதை உணர்த்துவதற்காகவும் பகவான் மீனாக அவதாரம் செய்தார். இதில் நமக்குக் கிடைத்த மாபெரும் பெருமை என்னவென்றால் இம்முதல் அவதாரம் நம் தமிழகத்தில் நிகழ்ந்தது என்பதே.

வைகையாற்றுக்குத் தெற்கேயுள்ள கிருதமாலை என்ற நதியில் சத்தியவிரதன் என்ற ராஜரிஷி ஜலதர்ப்பணம் செய்கையில், அவனுடைய கரங்களில் ஏந்திய நீரில் ஒரு அழகிய மீன் குஞ்சைக் கண்டார். அதை மீண்டும் நீரிலேயே விட்டார். அப்போது அம்மீன், ''அரசே! தீனதயாளரே! தன் சுற்றத்தையே கொல்லும் இந்நீர் வாழ் பிராணிகளிடம், எளியவனான என்னைத் தாங்கள் விடலாகாது'' என்று வேண்டியது. சத்தியவிரத மன்னரும் இரக்கம் கொண்டு அம்மீனைத் தம் கமண்டலத்து நீரில் போட்டுத் தன் ஆசிரமம் கொண்டு சென்றார். ஓரிரவிலேயே அம்மீன் வளர்ந்து விட்டது.

'மன்னரே! எனக்கு இவ்விடம் போதவில்லை. நான் சுகமாக வசிக்கத்தக்கபடி பெரிய இடமாக இருந்தால் நல்லது'' என்றது.

சத்தியவிரதரும் அம்மீனை கிணற்றில் சேர்த்தார். அங்கும் மீன் வளர்ந்துவிட, குளம் ஏரி என்று ஒன்றைவிட ஒன்று பெரியதான நீர் நிலைகளில் விட்டார். எங்கும் அம்மீன் அந்தந்த நீர்நிலைக்கும் மேலே வளர்ந்துகொண்டே போக இறுதியாக சமுத்திரத்தில் விட முயன்றார். அம்மீனோ,

'வீரனே! இங்கு வலிமை வாய்ந்த முதலைகள் என்னைத் தின்றுவிடுமாதலால் இங்கு என்னை விட்டுச் செல்வது உனக்குத் தகாது. என்னைக் காக்க வேண்டும்'-என்றது.


''பெருமானே! காப்பவர்யார், காக்கப்படுபவர் யார் என்ற பெரும் சம்சயம் என் உள்ளத்தில் ஏற்பட்டுள்ளது. மீன்வடிவில் தோன்றி என்னை மதிமயங்க வைக்கும் தாங்கள் யார் என்பதை அறியலாமா? அழகிய பேச்சும், அமோக வளர்ச்சியும் கொண்ட தாங்கள் உண்மையில் யார்? மாபெரும் சக்தி படைத்த மகரிஷியா? விண்ணாளும் தேவேந்திரரா? அன்றி அனைத்தும் தானேயாகிய ஆண்டவனே தானா?''

என்று சத்தியவிரதன் வணங்கிக் கேட்கவும், மீனாக வந்த பகவான் பேசினார்.

''சத்திய விரதா! நானே பரப்பிரம்மனான பகவான். படைக்கப்பட்ட இவ்வுலகம் பிரளயத்தில் அழியும் தருணம் நெருங்கியதால் அடியவனான உன்னை ஆட்கொள்ள வந்தேன். இன்று தொடங்கி ஏழாவதுநாள் முடிவில் உலகம் பிரளய ஜலத்தில் மூழ்கப் போகிறது. அப்போது பெரிய ஓடம் ஒன்று உன்னிடத்தில் வரும். அப்போது நீ திவ்ய மூலிகைகளையும், விதைகளையும், முக்கியமான சாராம்சங்களையும் எடுத்துக் கொண்டு சப்தரிஷிகளோடு அந்த ஓடத்தில் ஏறிக்கொள். அவ்வோடத்தை நானே செலுத்துவேன். ஒற்றைக் கொம்புள்ள மீனாகத் தோன்றும் என்னோடு வாசுகிப் பாம்பையே கயிராகக் கொண்டு ஓடத்தைப் பிணைத்துவிடு. நான் அவ்வமயம் உனக்கு ஞான உபதேசம் செய்கிறேன்.''

என்று கூறி மறைந்தார்.

ஏழாவது நாள் மாபெரும் மழையில் உலகம் மூழ்கத் தொடங்கிய பொழுதில் ஓடம் ஒன்று மன்னனிடம் வந்தது. மன்னன் ஔஷதிகளோடும் மகரிஷிகளோடும் ஓடத்தில் ஏறிக் கொண்டார். ஓடம் பெருங்காற்றில் பயங்கரமாக ஆடியது. சத்திய விரத மன்னர் பெருமானையே தியானம் செய்தார். அப்போது பெருமான் ஒற்றைக் கொம்புடன் இலட்சம் யோசனை நீளமுள்ள மிகப் பெரிய மீனாக அங்குத்தோன்றினார். (1 யோசனை-10 மைல்) மன்னர் படகையும் பெருமானின் ஒற்றைக் கொம்பையும் வாசுகியால் இணைத்தார். படகு சஞ்சாரத்திடே னுயே பெருமான்,



# தெய்வச் சேக்கிழார் விழா

குன்றத்தூரில் **தெய்வ சேக்கிழார் விழா** 12.5.91 ஞாயிறு அன்று அரசு விழாவாக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையால் சிறப்புறக் கொண்டாடப் பட்டது. அறநிலையத்துறையின் துணை ஆணையாளர் திரு தி.ஜெயராமன் பி.ஏ.பி.எல்., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

இவ்விழாவில் தொண்டை மண்டலாதீன சுவாமிகள் தவத்திரு சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பெரிய புராணக் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு எரிசக்தி நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமந்திரச் செம்மல் **டி. வி. வெங்கட்ராமன்** ஐ.ஏ.எஸ். அவர்கள், அன்பினாலும் தொண்டினாலும் சிறப்புற்றுத் திகழும் நாயன்மார்களின் வரலாற்றை விவரிக்கும் பெரிய புராண நூலை சிவக்கவிமணி அமரர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உரையுடன் மலிவுவிலைப் பதிப்பாக அறநிலையத்துறை வெளியிட ஆவனச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பெரிய புராணத்தில் அமைந்திருக்கும் வரலாற்றுச் சிறப்பினை ஒய்வுபெற்ற தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா.நாகசாமி அவர்களும், இலக்கிய பண்பாட்டுச் சிறப்பினை டாக்டர் த.அமிர்தலிங்கம் அவர்களும் விரிவாக எடுத்து விளக்கினர். **''ஞானக்குழந்தை''** (திருஞானசம்பந்தர் சரிதம்) எனும் நாட்டிய நாடகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அறநிலையத்துறையின் காஞ்சிபுரம் உதவி ஆணையாளர் திரு ப.ராஜா பி.எஸ்.சி., பி.எல் அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

அருள்மிகு சேக்கிழார் சுவாமி ஆலய நிர்வாக அதிகாரி திரு சுப்பிரமணியம் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்.

---


மன்னருக்கும், மகரிஷிகளுக்கும் ஆத்ம ஞானத்தை உபதேசித்தார். அவ்வுபதேசமே மத்ஸ்யபுராணம் என்பது. ஞானம், கர்மம், பக்தியோடு பிரம்மத்தையும் விளக்குவது. பிரளய முடிவில் சப்தரிஷிகளையும் அவரவர் இடத்தில் இருத்தினார். ஆத்ம ஒளியைப் பரிபூரணமாகப் பெற்ற சத்தியவிரத மன்னரே ஒளிரூபமான சூரியதேவனுக்கு மகனாகத் தோன்றும்படிச் செய்தார். அவருக்கு வைவஸ்வதமனு என்ற பெயர் ஏற்பட்டது. சூரிய தேவனுக்கு விவஸ்வான் என்று பெயர். விவஸ்வானுடைய மகன் என்பதால் வைவஸ்வதன், இவர் மரபிலேயே மீண்டும் ஸ்ரீராமராக அவதாரம் செய்தார்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.




தெய்வச் சேக்கிழார் விழா 12-5-91 அன்று குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. தவத்திரு தொண்டை மண்டலா தீனம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்., டாக்டர் இரா. நாகசாமி, டாக்டர் த. அமிர்தலிங்கம், துணை ஆணையாளர் திரு. தி. ஜெயராமன் பி.ஏ. பி.எல்., உதவி ஆணையாளர் திரு ப. ராஜா பி.எஸ்.சி. பி.எல்., குன்றத்தூர் திருமிகு நாகேசுவர சுவாமி ஆலய நிர்வாக அறங்காவலர் திரு குப்புசாமி, அருள்மிகு சேக்கிழார் சுவாமி ஆலய நிர்வாக அதிகாரி திரு சுப்பிரமணியம் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் உருவாக்கிய ஞானக்குழந்தை நாட்டிய நாடகம் நடைபெற்றது.





இந்தியச் சுற்றுலாத் தொழிற் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த நம் அறநிலையத்துறைக்கு இவ்வாண்டு இரு முதல்பரிசுகள் கிடைக்கப் பெற்றன. முதற் பரிசுக் கேடயங்களுடன் நம் ஆணையாளர் திருமிகு **வ. ராமதாஸ்,** ஐ.ஏ.எஸ். அவர்கள் நம் அரங்கின் முன் நிற்கும் காட்சி. துணை ஆணையாளர். திரு தி. ஜெயராமன் பி.ஏ. பி.எல். அவர்களும், அறநிலையத்துறை அலுவலர்களும் உடன் உள்ளனர்.